விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து




சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 07 வியாழக்கிழமை (20.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

## அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு அமைச்சுப்பதவியை துறக்கத்தயார்

### நீதியமைச்சர் உரை

(கொழும்பு)

அரசாங்கத்தை பலப்படுத்துவதற்காக தனது அமைச்சுப்பதவியை தியாகம் செய்ய தயாராக இருப்பதாக நீதியமைச்சர் டிலான் பெரேரா மாவெல்லையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டமொன்றில் தெரிவித் துள்ளார்.

அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற் காக பலர் தயாராக இருப்பதாகவும் அவ்வாறு அவர்கள் வரும் பட்சத்தில் தமது அமைச் சுப்பதவியை வழங்க நேரிட்டால் அதனை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார்.

நாட்டிலுள்ள தூரப்பிரதேசங்களில் உள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஜனாதிபதி, அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாகவும் இந்த நடவடிக்கை களுக்கு (10ஆம் பக்கம் பார்க்க)

## வானியல் விஞ்ஞான ஆய்வு எழுத்தாளர் சேர் ஆர்தர் சி.கிளார்க் காலமானார்

(கொழும்பு)



இலங்கையில் கடந்த 50 வருடங்களிற்கு மேலாக வசித்துவரும் இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வ தேசப் புகழ் பெற்ற வானிலை விஞ்ஞான ஆய்வு எழுத்தாளர் சேர் ஆதர் சி.கிளார்க் நேற்று கொழும்பில் தனியார் மருத் துவமனை ஒன்றில் காலமானார்.

இறக்கும்போது இவருக்கு 90 வயது. 1917 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி பிரித்தானியாவில் பிறந்த இவர் செய்ம்மதித் தொழில் நுட்பத்தின் தந்தை என்று வர் ணிக்கப்படுகின்றார். (10ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை இராணுவத்துக்கு உதவக் கூடாது

# இந்திய நாடாளுமன்றத்தில் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா எந்த உதவியையும் செய்யக் கூடாது என்று இந் திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவையில் தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க மற்றும் பாரதிய ஜனதாக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர். (10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு முக்கியத்துவம் வழங்கியே இலங்கை அரசாங்கத்துக்கு உதவி

### இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இன நெருக்கடிக்கு இராணுவத் தீர்வு என்பது சாத்தியமாகாது என இந்தியப் பிரத மர் கலாநிதி மன்மோகன் சிங் தெரிவித்துள் ளார்.

மோசமான மனித உரிமை மீறல்களும் இலங்கையில் இடம்பெற்று வருகின்றது. இது குறித்து இந்திய அரசின் பதில்தான் என்ன? என்று ம.தி.மு.க செயலாளர் வை. கோ., இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத் திற்கு பதிலளிக்கையிலேயே மன்மோகன் சிங் மேற்படி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13-வது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தும் யோசனைத் திட்டத்தை வரவேற்றிருக்கும் இந்தியப் பிரதமர் மன்மோ கன் சிங் இராணுவ (10ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் நேற்றுக்காலை பதற்றம்

(இருபாலை)

கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் மீது கைக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

எனினும் அக்கைக்குண்டு வெடிக்கவில் லை எனக் கூறப்பட்டது. இச்சம்பவத்தினை அடுத்து கடைகள், சந்தைகள் என்பன உடன டியாக மூடப்பட்டன.

அங்கு கூடியிருந்த மக்கள் நாலா புற மும் சிதறி ஓடினர். இச்சம்பவத்தினையடுத்து பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்துக் கள் சில மணிநேரம் தடைப்பட்டது.

போக்குவரத்துக்கள் இராச பாதையூடாக மேற்கொள்ளப்பட்டன. (ச-136)

## காணாமல் போதல் குறித்த தகவலை அரசு தவறாகப் பயன்படுத்தியுள்ளது

### ஐ.சி.ஆர்.சி. குற்றச்சாட்டு

(ஜெனீவா)

காணாமல்போதல் தொடர்பான தமது அந்தரங்க தகவல்களை தவறாக வழிநடத் தும் நோக்குடன் பகிரங்கப்படுத்தியமை தொடர் பில் செஞ்சிலுவைச் சர்வதேச குழு தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள் ளது.

இது தொடர்பாக ஐ.சி.ஆர்.சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

மனித உரிமைகள் தொடர்பில் ஐக்கிய அமெரிக்க இராஜாங்க அமைச்சு வெளியிட்ட 2007ஆம் ஆண்டுக்கான அறிக்கைக்கு பதி லளிக்கும் விதத்தில் 2008 மார்ச் 15ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக் கையில்,

'2007ஆம் ஆண்டின் இரண்டாம், மூன் றாம் காலப்பகுதியில் காணாமல் போதல் மற் றும் காரணமற்ற கொலைகள் குறிப்பிடக் கூடிய விதத்தில் குறைவடைந்து செல்கிறது' என ஐ.சி.ஆர்.சி உறுதிப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் ஐ.சி.ஆர்.சியின் அந்தரங்க அறிக்கைகளை ஐக்கிய அமெரிக்க தூதரகம் பெற்றுக் கொண்டுள்ளது எனவும் குறிப்பிடப் பட்டிருந்தது.

இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரம் தாம் சமர்ப்பித்த அந்தரங்க அறிக்கையி னை இவ்விதம் (10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தொடரும் மழையினால் 7500 குடும்பங்கள் பெரும் பாதிப்பு

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் பரவலாகப் பெய்து வரும்அடை மழை காரணமாக நானாட்டான் மற்றும் மன்னார் பிரதேச செயலக பிரிவுக ளில் 7ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.


இரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பெருமளவான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன.

அடை மழையினால் பாதிக்கப்பட்ட பகுதி களை மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரணி டி மெலும் நானாட்டான் பிரதேச செய லாளர் திருஞானசம்பந்தரும் நேரில் சென்று பார்வையிட்டதுடன் நிவாரணப் பணிகளை யும் மேற்கொண்டுள்ளனர்.

இதில் தேத்தாவாடிமருதன்குளம், தரவன் கோட்டை பிரிவிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள போதும் அதன் விபரங்கள் இன்னும் பிரதேச செயலகப் பிரிவுக்கு கிடைக்கப்பெறவில்லை என தெரியவருகின்றது.

பாதிப்படைந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளம் (10ஆம் பக்கம் பார்க்க)



அநுர பண்டாரநாயக்கவின் இறுதி நிகழ்வில்...

# இலங்கை மாணவர்கள் இந்தியாவில் தமது மேற்படிப்புக்களைத் தொடர்வதற்கான

## ஓர் அரிய சந்தர்ப்பம் (விண்ணப்ப இறுதிதிகதி நீடிப்பு)

சேவாலங்கா மன்றத்தின் சேவாலங்கா முதுநிலைக் கல்வித் திட்டமானது இந்தியாவில் பெங்களுரில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் (ராஜீவ்காந்தி பல்கலைக்கழகம், விஸ்வேஸ்வராய தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் பெங்களுர் பல்கலைக்கழகம்) மற்றும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள பாரதியார், பெரியார் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும் சில கல்லூரிகளுடன் கூட்டாக சேர்ந்து மேற்படிப்புக்களைத் தொடர விரும்பும் இலங்கை மாணவர்களிடமிருந்து பின்வரும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது..

### UNDERGRADUATE COURSES

B.C.A
B.Sc – Computer Science; Information Technology; Electronics & Communication; Mathematics; Physics; Chemistry; Bio Chemistry; Bio-Technology; Micro Biology; Statistics; Fashion & Apparel Design; Catering & Hotel Management
B.Sc Nursing
Bachelor of Pharmacy
Bachelor of Physiotherapy
B.B.A
B.B.M-Bank Management
B.Com
B.Com with Computer Application
B.Com-Electronic Banking
B.A Journalism; Psychology; English(CA); Tamil; Sociology
B.Ed

LL.B
BE(Electronics & Communication)
BE(Computer Science & Engineering)
BE(Electrical & Electronic Engineering)
BE(Information Science & Engineering)
BE(Mechanical Engineering)

### POSTGRADUATE COURSES

M.C.A
M.Sc – Computer Science; Electronics & Communication; Mathematics; Physics; Chemistry; Organic Chemistry; Applied Microbiology; Microbiology; Applied Genetics; Bio Chemistry; Bio-Informatics; Bio Technology; Food Processing; Apparel Technology & Management; Electronic Media; Electronic Science; Communication; Nursing;
M.Com (Computer Application)
M.Com
M.A – English; Tamil
MBA
M. Pharmacy
Master of Physiotherapy
Master of Tourism Administration
Master of Social Work

### DIPLOMA COURSES

**Diploma in** Electronics & Communication; Electrical & Electronics; Mechanical; Computer Science; Auto Mobile; Civil; Architecture; Information Technology; Hotel Management; Dental Mechanics; Dental Hygienist's X-Ray Technician's; Medical Lab Technician's; Pharmacy; Hospitality Management, General Nursing & Midwifery

விண்ணப்பப்படிவங்களையும் கற்கைநெறி சம்பந்தமான விபரக்கோவைகளையும் (கட்டண விபரம், தகமைகள்) ரூபா 750.00 ஐ செலுத்துவதன் மூலம் சேவாலங்கா மன்ற மாவட்ட காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 25.03.2008ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மாணவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

**Sewa Lanka Tertiary Education Program**

**Sewa Lanka Foundation-District Office**
250, Temple Road,
Nallur, Jaffna.
Tel: 021-222 9850

**Head Office(Consultant)**
Tel: 0602166334, 0602166335
Mobile: 0777 739261
Fax: 011 2517061

# அழைப்புக் கட்டளை

**இல.16- பிரிவு 55 (1)**

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றில்

வழக்கு இல. மணநீக்கம்/841

விஜயரட்ணம் சங்கீதா,
3,பெந்தக்கொஸ்தே ஒழுங்கை,
கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
-வழக்காளி

எதிர்

கந்தசாமி விஜயரட்ணம்,
26, வின்சன் தோட்டம்,
வேப்பங்குளம்,
வவுனியா.
-எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளிதனக்கும், எதிரா ளிக்கும் இடையே 11.02.2006 ந் திகதியன்று இடம்பெற்ற திருமணப் பதிவினை இரத்துச் செய்வதற்காக-

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள் ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2008ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம் நாளன்றோ அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத் தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பி டத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

*வரையப்பட்டது*
*வழக்காளியின் சட்டத்தரணி*

*நீதிமன்றக் கட்டளைப்படி*
*து.சிறீமோகன்*
*பதிவாளர்*
*மாவட்ட நீதிமன்றம்*
*யாழ்ப்பாணம்.*

குறிப்பு:- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன் றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பி னால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம்,
பதிவாளர்.

2008 ஆண்டு 03 மாதம் 17ஆந் நாளாகிய இன்று (952)


# தேவை

K.K.S கப்பல் சேவைக்கு ஓடக்கூடிய பதிவு உள்ள லொறி றைவரும், மெக்கானிக்கும், வெல்டரும் தேவை.


சிவலிங்கம் மோட்டோஸ் 77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2007 உயர் தர பரீட்சையில் '3A'சித்தி பெற்ற மாணவர்களின்

## கௌரவிப்பு நிகழ்வு - 15.03.2008



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவி


பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள்


கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்கள்


கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன்



வட. இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்.

(தொடர்ந்து வரும்)

# இன்று ஒரு தகவல்

## ஆப்ரஹாம் லிங்கன்

அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன் ஒரு நாள் ''கோச்'' வண்டியிலே தலைநகரான வாஷிங்டனுக்கு போய்க் கொண்டிருந்தார். அவர் போகும் பாதையில் ஓரமாக ஒரு பயங்கரமான சதுப்பு நிலம். சதுப்பு நிலம் என்றால், அது புதைகுழி-புதை மணல் என்கிறோமே அது மாதிரி அந்தச் சதுப்பு நிலத்திலே யாராவது சிக்கிக் கொண்டால் அவ்வளவு தான். ஆளை கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே இழுத்துக் கொள்ளும். தப்பிக் கரையேறுவது மிக மிகக்கடினம்.

ஆப்ரஹாம் லிங்கன் ஏதோ முக்கியமான அரசாங்க வேலையாக போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார். அதனால் அந்தச் சமயத்தில் அவர் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார். அப்படியாக அவர் ''கோச்'' வண்டியிலே வந்து கொண்டிருந்த போது ஒரு காட்சி அவர் கண்ணிலே பட்டது.

பாதைக்குப் பக்கத்திலே இருந்த சதுப்பு நிலத்திலே ஒரு சிறிய பன்றிக்குட்டி சிக்கித் தவித்துக் கொண்டிருந்தது. பரிதாபமாகக் கத்திக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் லிங்கனுக்கு ஏதோ மாதிரியாகிவிட்டது. உடனே வண்டியை நிறுத்திச் சொல்லி கீழே இறங்கினார். தன்னுடைய விலை உயர்ந்த ஆடைகளைப் பற்றிக்கவலைப்படவில்லை. தனக்கே ஆபத்து ஏற்படலாம் என்று கூடச் சிந்திக்கவில்லை. தான் நாட்டின் குடியரசுத் தலைவர் என்பதைக் கூடப் பொருட்படுத்தவில்லை. நேராக சதுப்பு நிலம் நோக்கிப் போனார்.

தனது ஆடைகள் வீணாவதைக் கூடப் பொருட்படுத்தாமல் சேற்றில் இறங்கி பன்றிக் குட்டியைக் காப்பாற்றி வெளியே கொண்டு வந்தார். அதன்பின் வண்டியில் ஏறி வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்ந்தார். உடம்பு முழுவதும் சகதி. பார்த்தவர்களுக்கு ஆச்சரியம். ஜனாதிபதி ஏன் இந்தக் கோலத்தில் வருகிறார் என்பது புரிய வில்லை. இவர் வண்டியை விட்டு இறங்கியதும் நேராக உடை களை மாற்றிக்கொள்ளப் போனார்.

''கோச்'' வண்டி சாரதியை எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள். என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். வழியிலே நடந்த சம்பவத்தை அவன் சொன்னான். லிங்கனின் இரக்க குணத்தை எல்லாரும் பாராட்டினார்கள். புகழ்ந்தார்கள். ஆனால் இதற்கு லிங்கன் என்ன பதில் சொன்னார் தெரியுமா?

''தயவுசெய்து இந்த மாதிரியான புகழ்ச்சியான பேச்சுக்களையெல்லாம் ஒதுக்குங்கள். இதெல்லாம் வேண்டாம். அந்தச் சின்னப்பிராணி சக்தியிலே மாட்டிக் கொண்டு துடித்துக் கொண்டிருந்தது. அதை நான் பார்த்தேன். உடனே என் இதயத்திலே முள் தைத்த மாதிரி ஓர் உணர்வு. அந்த முள்ளைப் பிடுங்கி எறிந்தேன். அவ்வளவு தான்!

''உண்மையில் அந்தப் பிராணிக்கு நான் உதவினேன் என்பதை விட எனக்கு ஏற்பட்ட துன்பத்தைப் போக்கிக் கொண் டேன் என்பது தான் உண்மை. இதிலே புகழ்வதற்கு என்ன இருக்கிறது?'' என்றாராம் லிங்கன்.

இந்தக் காலத்தில் எங்கள் மத்தியிலும் அப்படிச் சிலர் உண்டு. நீச்சல் தெரியாத ஓர் ஆள் தண்ணியிலே இறங்கி விட்டான். தண்ணீர் ஆழம் என்பது இறங்கிய பின் தான் அவனுக்குத் தெரிந்தது. தத்தளிக்க ஆரம்பித்தான்.

வாள்வாள் என்று கத்துகிறான். கரையிலே நின்று கொண்டிருந்த ஒருவர் இதைப் பார்த்தார். அவர் இதயத்திலே ''முள்'' தைத்த மாதிரி ஓர் உணர்வு. உடனே குபீர் என்று தண்ணீரில் பாய்ந்தார். தண்ணீரில் தத்தளித்துக் கொண்டு இருந்தவரைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்தார். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒருவர் காப்பாற்றியவரைப் புகழ்ந்தார்.

''என்னைப் புகழ வேண்டாம்'' என்றார் காப்பாற்றியவர். ''ஏன்?'' என்று கேட்டார் இவர். ''நான் ஏன் அந்த ஆளைக் காப்பாற்றினேன் தெரியுமா? அவர் நேற்றுத் தான் என்னிடம் 3000 ரூபா கடனாக வாங்கியிருக்கிறார். இவர் தண்ணீரோடு போய்விட்டாரென்றால் நான் கடனாகக் கொடுத்த பணமும் தண்ணீரிலே போய்விடுமே! அதனாலே தான் காப்பாற்றினேன்'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பஸ்ஸில் பயணித்த தமிழ் இளைஞன் வெள்ளை வானில் வந்தோரால் கடத்தல்

## மொனராகலையில் சம்பவம்

(பதுளை)

மொனராகலையில் தமிழ் இளைஞர் ஒருவர் வெள்ளை வானில் வந்த ஆயுதம் தரித்தோரினால் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மொனராகலையின் - கும்புக்கன் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த எம்.தர்மராஜா (வயது 26) என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவராவார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுவரையில் மொனராகலைப்பகுதியில் ஐந்து தமிழர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக இதுவரையில் எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

நேற்று முன்தினம் காலை மொனராகலை நீதிமன்றத்திற்கு வந்த குறித்த இளைஞன் அங்குள்ள அலுவல்களை முடித்து விட்டு, கும்புக்கன் தோட்டத்திற்கு தமது வீட்டை நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது, மூப்பனாவெலி என்ற இடத்தில் பஸ்ஸை வழிமறித்த வெள்ளை வானில் வந்தோர் பஸ்ஸில் ஏறி இவரை ஆயுத முனையில் அச்சுறுத்தி கடத்திச் சென்றுள்ளனர். வெள்ளை வானில் வந்தவர்கள் அறுவரும் கறுப்பு உடைகளை அணிந்திருத்ததுடன் ஆயுதம் தாங்கியிருந்தனர் என்று பஸ்ஸில் பயணித்த பலரும் தெரிவித் துள்ளனர்.

இக்கடத்தல் குறித்து, கடத்தப்பட்டவரின் உறவினர்கள் ஊவா மாகாணசபையின் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர் அ.அரவிந்தகுமாரிடம் புகார் செய்துள்ளனர். அதையடுத்து அவர் இது தொடர்பாக மொனராகலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எடிசன் குணதிலக்கவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

இதேவேளை, ஊவா மாகாண சபை உறுப்பினர் அ.அரவிந்தகுமார் இக்கடத்தல்கள் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் அவருக்கு அவசர தொலைநகல் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

இதன் பிரதிகள் அமைச்சர் பெ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன், பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பிரதி பொலிஸ் அதிபர் எம்.எச். என்.பி. அம்பன்வெல மொனராகலை பொலிஸ் அதிபர் எடிசன் குணதிலக்க ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## சுற்றாடலைப் பாதுகாக்க நிகழ்ச்சித் திட்டம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து இளைஞர்களின் பங்களிப்புடன் சுற்றாடலைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள 8ஆயிரம் இளைஞர் அமைப்புக்களைச் சேர்ந்த 30 ஆயிரம் இளைஞர்கள் இதில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றம் இந்த வருடம் நடைமுறைப்படுத்தும் நாட்டை வெற்றி பெறச் செய் யும் திறமைசாலிகள் எனும் நிகழ்ச்சியில் இணைத்துக்கொள்ளப்படுபவர்களிடம் இருந்து இதற்கான சேவைகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. (அ-7)

# நடிகர் ரகுவரன் காலமானார் திரையுலகினர் அதிர்ச்சி

(சென்னை)

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நடிகர் ரகுவரன் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலமானார்.



தமிழ் சினிமா வில்லன்களில் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தி ரசிகர்களை கவர்ந்த நடிகர் ரகுவரன் (வயது 60) சென்னையில் நேற்று காலமானார். உடல் நலக் குறைவு காரணமாக சென்னை சேத்துப்பட்டில் உள்ள தனியார் மருத்துவ மனையில் கடந்த சில மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில் இன்று காலை சிகிச்சை பலனின்றி ரகுவரன் காலமானார்.

நடிகர்ரகுவரன் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதி பிறந்தார். பி.ஏ.பட்டதாரியான இவர் 1982ஆம் ஆண்டு ஏழாவது மனிதன் என்ற படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகம் ஆனார். கூட்டுப்புழுக்கள், கை நாட்டு, மைக்கேல் ராஜ் ஆகிய படங்களில் ஹீரோவாக நடித்தார். ஆனால் வில்லன் வேடங்கள் தான் ரகுவரனுக்கு கைகொடுத்தன. மனிதன், பூவிழி வாசலிலே போன்ற படங்களில் ரகுவரனின் வில்லத் தோற்றம் ரசிகர்களால் ரசிக்கப்பட்டது.

சம்சாரம் அது மின்சாரம், அஞ்சலி, ஒரு பொம்முகுட்டி அம்மாவுக்கு ஆகிய படங்களில் குணச் சித்திர வேடத்தில் நடித்து அழுத்தமான முத்திரை பதித்தார். இதனைத் தொடர்ந்து மிஸ்டர் பாரத், அஞ்சலி, முதல்வன், பாட்ஷா, சிவாஜி பீமா உள்ளிட்ட ஏராளமான தமிழ் சினிமாக்களில் நடித்துள்ளார். கடைசியாக அவர் நடித்து வெளியான தமிழ் படம் சில நேரங்களில். இது தவிர இந்தி, மலையாளம், தெலுங்கு படங்களிலும் நடித்திருக்கிறார்.

நடிகர் ரகுவரன், நடிகை ரோகினியை காதலித்து திருமணம் செய்தார். ரகுவரன்-ரோகினி தம்பதியருக்கு ரிஷி என்ற மகன் பிறந்தான். இந்நிலையில் கணவன் - மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கணவர் ரகுவரன் தன்னை கொடுமை படுத்துவதாகவும், அடித்து துன்புறுத்துவதாகவும் ரோகினி பரபரப்பு புகார் கூறினார். இதைத் தொடர்ந்து சென்னை குடும்ப நல நீதி மன்றத்தில் விவாகரத்து பெற்றார். இதையடுத்து இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் நடிகர் ரகுவரன் காலமான செய்தியறிந்து அதிர்ச்சியடைந்த நடிகை ரோகினி, தி.நகரில் உள்ள ரகுவரனின் வீட்டுக்கு வந்தார். தனது கணவரின் உடலை தன்னிடம் ஒப்படைக்கவேண்டும்என்று அவர் கேட்டுள்ளார். ரகுவரனின் மறைவு செய்தி கேட்டு தமிழ் திரையு லகமே அதிர்ச்சியடைந்துள்ளது. (அ-5)

## இராசிபலன்

20.03.2008
(பங்குனி 07, வியாழக்கிழமை)
சதுர்த்தசி முன்னிரவு 11.51 மணிவரை
பூரம் சித்தம் பின்னிரவு 03.42 மணி வரை
இராகுகாலம் 01.47-03.17மணிவரை
சுபநேரம்-07.47-09.17 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி. |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை. வேலைச்சுமை, ஆரோக்கியக்குறைவு. |
| மிதுனம் | உடல்சோர்வு, தொழில் ஆர்வம். வாகனசுகம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | பிரயாண நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| சிங்கம் | கற்பனை மிகுதி, விவாதம், காரிய தாமதம், அதிக செலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம். நல்ல முயற்சி, போசனசுகம். |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், எதிர் பாராத நன்மை, சயனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம். |
| தனுசு | புதியவிடயம், தொழில் மேன்மை. நண்பர்கள் உதவி. |
| மகரம் | அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு. பிரயாணம், முயற்சிதாமதம். |
| கும்பம் | புனல்வியாதி, வீண்பிரச்சினை. வாகனபயணம், வேலைச்சுமை. |
| மீனம் | திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்

# அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மூன்று தமிழ் மாணவர் ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற எட்டு மாணவ மாணவிகள் எதிர்வரும் யூலைமாதம் ஜப்பானில் நடைபெறும் ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

யூலை மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள 20ஆவது ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டிலேயே இந்த எட்டு மாணவ மாணவிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவனான எம்.மதுஷன். கற்பிட்டி அல்லக்ஷிய மத்திய மகாவித்தியாலய மாணவி யு.எச்.பாத்திமா பஸ்ரின், கொழும்பு இந்துக்கல்லூரி மாணவன் ரி.நிவமுஷன் ஆகிய மூன்று தமிழ் மொழி மாணவர்களும் ஜப்பான் செல்லும் வாய்ப்பினை பெற்றுள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 50 நாடுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாக கல்வி அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# மத்தியஸ்தர் சபையில் காலி இடங்களுக்கு உறுப்பினர்களை நியமிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் காலியாக இருக்கும் மத்தியஸ்தர் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப் படவிருக்கிறார்கள்.

இதற்கான ஒழுங்குகளை நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கிடையில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகளைச் சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்காக பிரதேச செயலகங்கள் தோறும் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டு கடந்த இரு வருடங்களாக இச் சபை செயற்பட்டு வருகிறது.

அநேகமான பிரதேச செயலகங்களில் மத்தியஸ்தர் சபை இயங்கி வருகின்ற போதிலும் அந்த சபைகளில் அந்தந்த கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படாமல் இருக்கி றார்கள்.

இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் பதவி காலியாக இருக்கும் சபைகளுக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

இதற்கான நடவடிக்கைகளை நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது. (அ-5)

# வலி.வடக்கு பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கை

## பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது தற்காலிகமாக வேறு பிரதேசங்களில் வதிகின்ற குடும்பங்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்வதற்கு விருப்பம் தெரிவித்து, இதுவரை தமது குடியிருப்புக்கான காணிக்குரிய வலிதான உறுதிகளைச் சமர்ப்பிக்காதவர்கள் அதனை தற்போது வதியும் பிரிவு பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் மீளக் குடியமர்வதற்கான விசாரணைக்கு இற்றை வரை சமுகமளிக்காதவர்கள் உடனடியாக விசாரணைக்கு சமூகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். தொடர்ந்து பிரதேச செயலகங்களில் இதற்கான விசாரணை நடைபெறும் என யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (அ-5)

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் மன்றக் கலாமண்டபத்தில் நடாத்தப்பெறும் வருடாந்த இசை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை, பண்டன் ஆவர்த்தனா இசைக் கல்லூரி ஆதரவில் பி.ப 2மணிக்கு காரைநகர் க.பவப்பிரியன் குழு வினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து கீதவாணி இசைக்கல்லூரி மாணவிகள் வழங்கும் 'குழு இசை', செல்வி தாரணி ரஞ்சன் குழுவினரின் "இசையரங்கு", செல்வன் தவநாதன் றொபேட் குழுவினரின் "குரல் திரிபு" ஆகிய இசை நிகழ்ச்சிகளும், பொன்னாலை சந்திர பரத கலாமன்றம் வழங்கும் "நாட்டியாஞ்சலி" நிகழ்ச்சியும் இடம் பெறும். (ஓ)

## முன்பள்ளி நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கெருடாவில் அம்பிகை முன்பள்ளி நிலைய திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு சங்கத் தலைவர் இ.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கத் தலைவர் பா.பத்மநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். (ஓ)

# துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு சென்சேவியர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அபிவிருத்திக்கு துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வேலணை பிரதேச சபை 15 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நிதி மேற்படி சங்கத்துக்கு வழங்கப்பட்டதுடன் உள்ளூராட்சி உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் நேரடியாகச் சென்று அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டு வேலைகளைத் துரிதப் படுத்துமாறு பணித்துள்ளனர். (அ-5)

## ஸ்ரீ அம்மா பகவான் கலசபூஜை, பாதுகை பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் இந்து மாமன்றத்தின் ஆதரவில் யாழ். ஏகத்துவ நிலைய தலைமையகத்தால் பாதுகைபூஜையும், கலச பூஜையும் வித்தியா ஆசியும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை போயா தினத்தன்று காலை 9.30 மணிமுதல் 1.30மணி வரை மத்திய கல்லூரி தியான மண்டபத்தில் நடத்தப்படும். அனைத்து மாணவர்களும் கலந்துகொண்டு ஆசியைப் பெற்று உய்யும் வண்ணம் ஸ்ரீ கல்கி சுவர்ண யுக அமைப்பகம் கேட்டுள்ளது. (அ-7)

# சென்.ஜோன்ஸ் படைப்பிரிவுக்கு புதிய இரண்டு மாடிக் கட்டடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்.ஜோன்ஸ் படைப் பிரிவிற்கு இரு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்கான நிதியை சென். ஜோன்ஸ் படைப் பிரிவின் கொழும்பு தலைமையகம் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கட்டடத்தை அமைப்பதற்கு யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் வீட்டுடன் சேர்ந்த காணியை சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு 65இலட்சம் ரூபாவிற்கு வாங்கியுள்ளது.


அவுஸ்திரேலிய சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் இதற்கான நிதி வழங்கியுள்ளனர். புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர் நாட்டி வைக்கவுள்ளார். (அ-5)


## வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவை புதுவருட நிர்வாகத் தெரிவு

வலி.கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் அண்மையில் வலி.கிழக்குப் பிரதேச செயலர் ஏ.மோகன்றாஜ் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது கீழ்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பண்பாட்டுப் பேரவையின் தலைவராக பிரதேச செயலர் ஏ.மோகன்ராஜும், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் மா.கிருஷ்ணானந்தனும் பொருளாளராக கலாசார அபிவிருத்தி உதவி யாளர் ந.சக்திவேலும் தெரிவு செய்யப்பட்டனர். பிரதேச பண்பாட்டுவிழா எதிர்வரும் ஆனி மாதத்துக்கிடையில் நடைபெறவுள்ளதாகவும் பேரவைத் தலைவர் ஏ.மோகன்ராஜ் தெரிவித்தார். (அ-134)





யாழ்.கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற பாடசாலை மைதானத்தை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வைரமுத்து செல்வராசா நாடாவெட்டித் திறப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணகரன் மற்றும் பிரமுகர் காணப்படுவதையும் , புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற பாடசாலைப் பெயர் வளைவினையும் காணலாம்.

## உபகரண கையளிப்பு வைபவம்

கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் தொழில்சார் பயிற்சி பங்காளர் நிறுவனங்களைப் பலப்படுத்தல் தொடர்பான உபகரண கையளிப்பு வைபவம் 21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 82/1ஏ, செட்டித்தெரு நல்லூரில்அமைந்துள்ள WUSC நிறுவனத்தில், வடபிராந்திய பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே. ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில்பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளதாக நிறுவன சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் அறிவித்துள்ளார். (இ)

# சர்வதேச மகளிர் தின விழா பொதுநூலக கேட்போர் கூடத்தில் இன்று

யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை சர்வதேச மகளிர் தின விழா யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மல்லாகம்மாவட்டநீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் சிராணிமில்ஸ், சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபவிருத்திக்கான நிறுவனப் பணிப்பாளர் பொன்மலர் இராஜேஸ்வரன், யாழ். கிராம அலுவலர் நா.சுந்தர்ராஜா, சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் ஜே.யோசெப், ஆனைக்கோட்டை மாதர் சங்கத் தலைவி பத்மலோசினி சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மாலை நிகழ்ச்சிகளாக மகளிர் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் வழங்கும் "சமுதாயத்தில் பெண்" எனும் நாடகமும் தென்மராட்சி மகளிர் இணைந்து தயாரித்தளிக்கும் "கல்லின் கசிவு" எனும் நாடகமும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் ஆர்வமுள்ளோர் வருகைதந்து பயன்பெற முடியுமென்றும் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தெரிவித்துள்ளார்.

விழாவின் இறுதியில் மகளிர் ஒன்றுகூடி யாழ்ப்பாண மகளிர் பிரகடனம் தயாரிக்கப் பட்டு அறிக்கையிடப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ)

# ஓய்வூதியத் திட்டத்தில் இணையுமாறு விவசாய சம்மேளனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் பெண்கள் உட்பட அனைத்து விவசாயிகளும் விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் இணையுமாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் க.முதலியார் சகல விவசாயிகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். விவசாயிகளின் நன்மை கருதி அரசாங்கம் விவசாய ஓய்வூதியத்திட்டத்தை ஆரம்பித்த போது சுமார் 500 விவசாயிகள் மட்டும் இத் திட்டத்தில் இணைந்தனர். ஆரம்பத்தில் 250 ரூபாவாக வழங்கப்பட்ட ஓய்வூதியம் 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு தற்பொழுது 1000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் தொகையை வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு 3000 ரூபாவாக அதிகரிப்பதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதுபற்றி பாராளுமன்றத்தில் பேசப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 500 விவசாயிகள் ஓய்வூதியத்தை பெற்று வந்துள்ளனர். இத்தொகை நாளடைவில் 1500 ஆக அதிகரித்து தற்பொழுது 2500 விவசாயிகள் மாதாந்தம் ஓய்வூதியத்தைப் பெற்று வருகிறார்கள். தற்பொழுது 5000 விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளார்கள்.

இந்த ஓய்வூதியத் திட்டம் விவசாயிகளின் நன்மைக்காக ஆரம்பிக்கப்பட்டது. எனவே குடாநாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் உட்பட சகல விவசாயிகளும் விவசாயத் திட்டத்தில் அங்கத்தவர்களாக இணைந்து நன்மைகளைப் பெறுமாறு முதலியார் தெரிவித்துள்ளார். (அ-5)

## சாவல்கட்டு கிராம வீட்டுத் திட்டம் பூர்த்தியடையாமையால் பயனாளிகள் அவலம்

சாவல்கட்டு கிராமத்தில் வசிக்கும் மீனவர்களின் நன்மை கருதி 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 100 வீட்டுத் திட்டம் முழுமையாகப் பூர்த்தியடையாததினால் பத்துக்கும் மேற்பட்ட பயனாளிகள் இருக்க இடமின்றி திண்டாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 100 வீட்டுத் திட்டத்திற்கு கடற்றொழில் அமைச்சு, வலி தென்மேற்கு பிரதேச செயலகம் மற்றும் அரச சார்பற்ற பொதுஸ்தாபனங்கள் உதவிகள் வழங்கின.

இருந்தும் இத்திட்டத்தில்பத்துக்கும் அதிகமான வீடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமல் அரைகுறையாக இருப்பதாகவும் இந்த வீடுகளுக்குரிய பயனாளிகள் கடந்த சில வருடங்களாக இருக்க இடமின்றி அவதிப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# யாழ். வண்ணார்பண்ணை

# வைத்தீஸ்வரப் பெருமான்

## ஆலய தேர் சிறப்பு மலர்- 20.03.2008

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



வழிபடும் அடியார்களின் வல்வினை போக்கி நல்வாழ்வு நல்கும் வண்ணை வைத் தீஸ்வரனுக்கு இன்று தேர்த்திரு விழா. ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத் தீஸ்வரனாக எழுந்தருளியி ருக்கும் சிவன் இன்று ஸ்ரீ சோமஸ்கந்த மூர்த்தமாக ரதத் திலே ஆரோகணித்து அருள்புரியும் நன் னாளாகும்.

மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். ஆகவே அநியாயங் களையும், அக்கிரமங்களையும் அழித் தொழித்து துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் நோக்கில் இன்று வண்ணையில் பஞ்சரத பவனி நடைபெறுகிறது. சிவன் தேரிலே ஆரோகணிக்கின்றார்.

நெக்குருகி நிற்கும் பக்தர்களைக் காத்து திருவருள் சுரக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீ வைத்தீஸ்வரனின் திருப்பாத கமலங்களைப் பணிந்து அருளாசி வழங்குவதில் பேருவகையடைகின்றோம்.

இன்று முதல் நாட்டில் சுபிட்சமும் அமை தியும் சமாதானமும் நிலவ வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகள் வழங்கு கின்றோம்.

எங்கும் மகிழ்ச்சி பொங்கட்டும்
'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

**ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமகா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.



## கன்மவினை தீர்த்திடலாம் கருதி வாரீர்

பஞ்சரதம் பங்குனியில் பவனி வருகுது
பார்க்குமிடந்தோறும் அருட்காட்சி தெரியுது
அஞ்செழுத்து மந்திரத்தைச் சொல்லி சொல்லியே
அடியார் கூட்டம் ஆனந்தமாய்ப் பாடி செல்லுமே
வண்ணையிலே கோயில் கொண்ட வைத்தீஸ்வரர்
வாலாம்பிகா பாங்குறைய தேர் ஆரோகணம்
கண்குளிரப் பார்த்திடலாம் வாரீர் , வாரீர்
கன்மவினை தீர்த்திடலாம் கருதி வாரீர்



கா.கார்த்திகேசு
நல்லூர்.



கணனி வாங்க
முன் ஒரு நிமிடம் !!
பின்பு கவலைப்படத்
தேவையில்லை

தரமான உதிரிகள்!
குறைந்த விலை!
நீடித்த ஆயுள்!

Contact Us
UNIT
மனோகரா சந்தி,
347, K.K.S. Road,
Jaffna.
4590720,
0773134737

சகலவிதமான அசைவ உணவு
வகைகளுக்கு
ஹோட்டல் நொக்கியா
(சி/912) இல:110 ,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உறுதியான உத்தரவாதம் உள்ள 22 கரட் தங்க
வைரநகைகளுக்கு
சாரங்கா
நகை மாடம்
157/1 ,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/913)

ஜெகன் களஞ்சியம்
477 ,கங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/907)

தீராத மூல வியாதியால் அவதிப்படுவோரின் கவனத்திற்கு...
இரசாயன முறையில் மூலரோக நிவாரணம்
மூல ஆர்சிஸ் இரசாயன மற்றும் மூலரோக பஸ்பம்
மூலரோக சம்பந்தமான வியாதிகளை உடன் குணப்படுத்தும்
மூலரோகம் என்பது பரம்பரை வியாதி -இதனால் ஆரம்பத்தில் சிறு கட்டிகளை உண்டாக்கும். அத்துடன் எரிச்சல் கூடின மலம் போக்குத் தன்மை, சீதம்போக்கு, குடல் இறக்கம், குடலில் வாய்வு நிரம்புதல் போன்ற வியாதிகளை இம் முறையினால் குணப்படுத்த முடியும். மேலும் சிறுசீர் எரிச்சல், சிறுநீர் தடங்கல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது உடன் பாவித்து குணம் பெறுங்கள்.
யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பாம்சிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
Manufactured by:
kadahapola dharmarathne,
Aushadalaya,
Kuliyapitiya Road, Kadahapola,
Narammala. (சி/909)

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
Pepsi யாழ். ஏக விநியோகஸ்தர்கள்
147,149 ,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/910) T.P.No:222 2833, 222 7144

லிங்கம் கிறீம் ஹவுஸ்
119 ,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/911)

RUPA VERSATILE
TRADES
104 ,Stanley Road, Jaffna.
T.P.No:2479 (சி/914)

PC PARK (PVT) LTD.
Always with you
#633, KKS ROAD, JAFFNA. TP : 021 222 9581
POINTPEDRO ROAD, NELLIYADY, KARAVEDDY. TP : 021 226 4828
WWW.PCPARK.LK INFO@PCPARK.LK

Processor
3.0GHz (2MB) Intel Pentium Processor - 8000.00
3.0GHZ (4MB) Intel Pentium Processor - 11500.00
1.8GHZ Intel Pentium Dual Core Processor - 9200.00

Mother Board
Asus P5GC MX Motherboard - 7400.00
Foxconn Motherboard - 6400.00
Intel 945 GCNL Motherboard - 8600.00
MSI Motherboard - 6000.00
478 Biostar Motherboard - 6800.00

Memory
1GB DDR-2 Kingston Ram - 2750.00
512MB DDR-2 Kingston Ram - 1600.00
512MB DDR-1 Kingston Ram - 3500.00

Else
M.Media Keyboard - 500.00
Optical Mouse - 500.00
Normal Mouse - 300.00
Speaker - 600.00
5.1 Creative Woofer - 8250.00
Scanner - 6500.00
ATX Casing with genuine power supply - 4700.00
LQ 300 Printer ribbon - 500.00
TV Card MSI - 4500.00
HP LaserJet tomers
Canon Cartridges

Printer
HP Inkjet Printer D1460 - 6000.00
HP LaserJet Printer 1005 - 15000.00
Dot matrix Printer EPSON LQ300+ - 21000.00

Hard disk
80GB SATA Hard disk - 5450.00
80GB IDE Hard disk - 5750.00

UPS
Power Tree UPS 650W - 5800.00
Mercury UPS 650W - 6000.00

Optical Drive
DVD Writer Samsung SATA - 4300.00
DVD Writer Samsung IDE - 4200.00
DVD Writer Asus Light Scribe - 4500.00
Combo Drive Samsung - 3200.00
DVD Rom Samsung - 3000.00

Monitor
17"CRT Samsung Monitor - 13000.00
15"LCD View sonic Monitor - 21000.00
17"LCD Wide Screen Viewsonic Monitor - 24000.00
17"LCD LG Monitor - 23000.00

Flash
1GB Kingston - 900.00
2GB Kingston - 1600.00
4GB Kingston - 2700.00

HP PAVILION G3215L BRANDED SYSTEM
3.0 Dual core processor
512MB DDR2 SDRAM
80 GB SATA 7200 rpm
Combo Drive
56K bps data/fax modem
Integrated graphics
AC97 sound
Inbuilt 9 - 1 Card reader
17" C R T
63,000.00 Warranty & 1 year

PC PARK ASSEMBLED SYSTEM
Dual core 1.8 GHz processor
Intel 945 Chipset motherboard
1 Gb DDR2 SDRAM
80 GB SATA 7200 rpm
Combo Drive
Integrated graphics
ATX casing
17" C R T
UPS
54,000.00 Warranty & 3 years
(சி/915)
Upto 3 years warranty for the listed products.
Claim your warranty anywhere in Sri Lanka in our showrooms.

இன்றே கணணியுடன்
இணையுங்கள்...
Processor
Intel Celeron Dual Core 1.6
Celeron 3.0
Intel 3.0 Ghz Dual Core
Intel Core 2 20 Duo
மிக குறைந்த விலைகளுடன்
Intel pentium4 1.8Ghz
Asus Motherboard,
512 DDR 2, 80GbHard Disk,
DVD Drive,
ATX Case with SMPS,
17" CRT Monitor,
Keyboard & Optical Mouse.
UPS
Mother board
Intel 945 Desktop Board
Asus 945 - DDR 2
BIOSTAR LGA 775
FOXCONN LGA
BIO STAR Socket 478
Moniter
15" Samsung CRT
17" MAG CRT
17" View Sonic LCD
17" LG LCD
Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston
RAM
256 DDR 1
512 DDR 1
256 DDR 2
512 DDR 2
1 GB DDR 2
ROM
DVD-RW Samsung
DVD-RW ASUS
UPS 5900/=
Hard Disk
80 GB Sata 7200 RPM
160 GB Sata 7200 RPM
40 GB IDE
80 GB IDE
Printer
1020 hp Laser Jet
Hp DeskJet
Hp DeskJet - All in One
Epson LQ - 300+II
சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.
All Type Casing 3900-ல் இருந்து
WebCam
hp Toner (No 1)
Printer Ribbon , Cartridges and Tonner
Warranty 1 & 3 Years With Servise
திருமுருகன் கொம் நெற்
(சி/916)

# மாணவர்களுக்கான நேர முகாமைத்துவம்

மாணவர்களே உங்களது பருவம் வாழ் நாளில் மிக உன்னதமானது; மகிழ்ச்சியானது; உத்வேகம் கொண்டது; பொங்கிவரும் புதுவெள்ளமாக துணிவும்; உணர்வும் மன வெழுச்சியும் வெளிப்படும் பருவம். சிலருடைய வாழ்வில் இது காட்டாறாக கட்டுக்கடங்கா வேகத்தில் சென்று தனது பாதுகாப்பு எல்லைகளைக்கூட சிதைத்து விடுவதுண்டு. அத் துணை ஆபத்தையும் உள்ளடக்கிய பருவம்.



நான் இங்கு க.பொ.த. சாதாரண மற்றும் உயர் தரவகுப்பு மாணவர்களைப் பற் றியே பேசுகிறேன். உங்களை நீங்களே முகாமை செய்யவேண்டும். இதனை சுய முகாமைத்துவம் ( Self-management ) என்று சொல்கிறோம்.

உங்கள் இலக்குகளை மிகச்சரியாக உரிய காலத்தில் நீங்கள் அடையவேண்டும். உங்களுக்கும் பெற்றோருக்கும் சமூதாயத்திற்கும் இழப்பும் நட்டமும் கவலையும் ஏற்படுத்தாமால் உங்கள் இலக்கை வெற்றிகரமாக அடைய வேண்டும்; செயல்திறனோடும் வினைத்திறனோடும் அடையவேண்டும்; மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் சாதனையையும் நீங்கள் கையகப்படுத்தியாக வேண்டும்.

இதற்குரிய உள்ளடங்கிய வலு- ஆற்றல் உங்களிடம்தான் உள்ளது. ஒன்றே ஒன்று! உங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுங்கள். உங்கள் அன்றாட நடத்தைகளை நீங்களே மதிப்பீடு செய்யுங்கள். உங்கள் செயல்களை உங்கள் நன்மைக்குரியதாக மாற்றுவதற்கு இந்த சுயபார்வை, உள்நோக்கிய கவனக் குவிப்பு தேவை. இதற்குரிய உபாயங்கள் பல, இவற்றில் முதன்மையானது நேரமுகாமைத்துவம்.

இது பற்றி சில அம்சங்களை நோக்குவோமா?

### நேரம் ஒரு வளம்

எதிர்காலத்தில் எங்கள் முன்னேற்றங்களுக்கான அடிப்படை இயலுமையைக் கொண்டது நேரமாகும். எந்தவொரு மனிதனது உரிமை நேரத்தை அவரிடமிருந்து பிரித்தெடுக்க முடியாது. ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள் உள்ளன. என்பதையும் உங்கள் விருப்பப் படி அதை நீங்கள் பயன்படுத்தலாம் என்பதையும் மறவாதீர்கள். இத்தகைய உங்கள் நேரத்தை நீங்கள் இரு வழிகளில் பயன்படுத்தலாம்.

1.பயனுடையதாக்குதல் –சிக்கனமாக திட்டமிட்டு பயன்படுத்துதல் அதிகூடிய நன்மைகளுக் காக நேரத்தை பயன்படுத்துதல்.

2.விரயமாக்குதல்– திட்டமின்றி செல விடுதல் , மற்றவர் சொல்வதன் படி அலைதல்; பயன்தரா பொழுதுபோக்கில் நேரம் செலவிடுதல்.

பயனுடைய தேவைகளுக்காக நேரத்தை அதிகம் ஒதுக்கும் போது அது வளமாகி விடும். விரயம் என்பதிலிருந்து படிப்படியாக பயனுடைய செயல்களுக்கு உங்கள் நேரத்தை செல விடுங்கள் நேரம் வளமாகிவிடும்.

### நேரத்தைப் பயன்படுத்துதல்

உங்கள் நேரத்தை பின்வருவனவற்றுக்கு பகிர்ந்தளிக்க முடியும்

1.படிப்பு 2.ஓய்வு 3.குடும்பவேலை 4. வருமானத்துக்கான வேலை

குடும்பத்தின் பொருளாதார வசதி அல்லது வசதியின்மைக்கேற்ப இவற்றுக்கான நேர ஒதுக்கீடுகளில் நீங்கள் மாற்றங்கள் செய்ய முடியும்.

நேரத்தை சிக்கனமாக திட்டமிட்டுப் பயன்படுத்தினால் பின்வரும் நன்மைகள் கிடைக்கும்.

- சிறந்த பரீட்சைப்பெறுபேறுகள்
- உங்களுக்கு மகிழ்ச்சியும் பெருமையும்
- குடும்பத்திற்கு இலாபமும் குதூகலமும்
- சிறந்த பல்கலைக்கழகத்துக்கு அனுமதி
- புலமைப்பரிசில்கள்
- சிறந்த தொழில் வாய்ப்புக்கள்
- திறமைசாலிகளுடனான தொடர்புகள்
- படிப்படியாக மேல்நோக்கிய சமூக அசைவு அல்லது முன்னேற்றம்

இத்தகைய நன்மைகளுக்காக நேரத்தை முகாமை செய்யவேண்டும் அல்லவா?

மறுபக்கத்தையும் நோக்குவோமாயின் உங்கள் நேரத்தை மதிக்காமல் விரயமாக்கினால் அதற்காக என்ன கிடைக்கும்?

- பரீட்சையில் தோல்வியும் ஏமாற்றமும்
- மாறாத மன உளைச்சலும் கவலையும்
- உங்கள் மதிப்பு வீட்டிலும் பள்ளியிலும் குறைதல்
- குடும்பத்திற்கு நட்டமும் ஏமாற்றமும்
- திறமையானவர்களைப் பிரிதல்
- வருமானமும்மதிப்பும் குறைந்த வேலைக் குச் செல்லுதல்

இப்போது உங்களுக்கு தெரியும் ஏன் நேரத்ந்த விரயமாக்குதல் கூடாதென்று.

### நேரத் திட்டமிடல்

ஒரு நாளுக்குரிய வேலைகளை நேரத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நேரத்தை உங்கள் நாளாந்த தேவைகளுடன் பொருத்தமாக இணைத்துவிடுங்கள்.

| வேலை | பள்ளிப் படிப்பு | டியூசன் | ஓய்வு | வீட்டில் படித்தல் | வீட்டிற்கு உதவுதல் |
|---|---|---|---|---|---|
| முற்பகல் | * | | | | |
| பிற்பகல் | | * | * | | * |
| முன்னிரவு | | | | * | |
| பின்னிரவு | | | * | | |
| அதிகாலை | | | | * | |

இவ்வாறு வார நாட்களுக்குத் தனியாகவும் வார இறுதிநாட்களுக்கு தனியாகவும் திட்டமிடுங்கள். உங்கள் உடல் நிலை, குடும்ப நிலைமை, குடும்பத்தின் தேவைகள் என்பவற்றை மனதில் இருத்தி இதனைத் திட்டமிடுங்கள்.

தேவைப்பட்டால் இத்தகைய திட்டமிடலை மாற்றியமைத்துக்கொள்ளுங்கள். அதில் தவறேதுமில்லை.

### முன்னுரிமை வழங்குங்கள்

உங்கள் நாளாந்த வாராந்த வேலைகளை (படிப்பு உள்ளடங்க) திட்டமிடும்போது முன்னுரிமை வழங்க வேண்டியவற்றை இனங்காண வேண்டியது அவசியம்.எவ்வாறு முன்னுரிமைப் படுத்துவது ?

- மிக அவசரமான வேலைகள்
- மிக அவசியமான வேலைகள்
- மிக அவசரமும் அவசியமுமான வேலைகள்
- அவசரமானவை ஆனால் அவசியமானவையல்ல.
- மிக அவசியமானவை ஆனால் அவசரமானவையல்ல

இதனை மிக ஆழமாக யோசித்து நிதானமாக அட்டவணைப்படுத்தி பழகுங்கள். தொடக்கத்தில் சிரமமாகத்தோன்றும். பின்பு படிப்படியாக மிகவும் சுலபமாக இத்தகைய ஒழுங்கில் வரிசைப்படுத்தி பழகிக்கொள்வீர்கள்

தேவைக்கேற்ப நாளாந்த வேலைகளை இந்த ஒழுங்கில் திட்டமிட்டு அதே முறையில் செயற்படுத்திவாருங்கள்.படிப்படியாக முன்னேற்றம் காண்பீர்கள்

### எதிரி யார்? எது?

உங்கள் நேரத்தை விரயமாக்கும் எதிரி யார்? அல்லது எது? என்பதை நிதானமாகக் கண்டறியுங்கள். அதுவே வெற்றியின் முதல் படி.

- உங்கள் நேரத்தை வீணடிக்கும் நாளாந்த செயற்பாடுகள் எவை எனக் கண்டறியுங்கள். அதனை எவ்வாறு குறைக்கலாம் அல்லதுதவிர்க்கலாம் என சிந்தியுங்கள். வேறு சிலரிடம் இதைக் கையளிக்கலாமாயின் கொடுத்து விடுங்கள்.

ஒத்திப் போடக்கூடியவையாயின் ஒத்திப் போடுங்கள் நிதானமாக நீங்களே யோசித்து முடிவெடுங்கள்.

- உங்கள் பொன்னான நேரத்தை வீணடிப்பவர் யார்? நண்பர்களுள் யார் அவர்? அவரைத் தவிர்க்க முயலுங்கள் அல்லது அவருடன் தொடர்புடைய வேலைகளின் அவசியத்தை பரிசீலனை செய்யுங்கள். தொடர்ந்து வீணடிப்பாராயின் அவர் நண்பரல்ல உங்கள் எதிரி.
- உங்கள் நேரத்தை வீணடிக்கும் பொழுது போக்கு சாதனம் எது என்பதை உள் மனதில் ஆழமாக யோசியுங்கள் வானொலியா? தொலைக்காட்சிப்பெட்டியா? செல்போனா? விளையாட்டா? ஈ கஃபேயா? கவனமாக கண்டறியுங்கள். துல்லியமாக இனங்கண்டு அதைத் தவிர்க்க முயலுங்கள் படிப்படியாக இதனை உதவும் சாதனமாகவும் மாற்றமுடியும். இத்தகைய எதிரியை கண்டறிந்து தவிர்த் துக் கொள்ளுங்கள்.

**மா.சின்னத்தம்பி**
*சிரேஷ்ட விரிவுரையாளர் ,கல்வியியல்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

இவற்றைக்கவனத்தில் வைத்து நாளாந்த வேலைகளை ஒரு தாளில் குறித்துவைத்து அதன்படி செயற்பட்டு வாருங்கள். முடியாத வேலைகளுக்கு அடுத்த நாளில் முன்னுரிமை வழங்குங்கள் எழதிய நிகழ்ச்சிப்படி செயற்படுங்கள் நீங்கள் குறித்து வைத்த தாள் வழி காட்டியாகும்.எஜமனாகிவிடும். நிச்சயம் நேரம் உங்களுடையதாகும். வெற்றி உங்கள் கைப்பொருளாகி விடும். முயன்று வெற்றிபெறுங்கள். *

# இந்திய அரசின் செயற்பாடுகள் இலங்கையின் இனவெறி அரசுக்கு பேருதவியாக இருக்கிறது

## பிரதமர் மன்மோகன்சிங்குக்கு வைகோ கடிதம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரால் மிருகத்தனமாக கொலை செய்யப்பட்டு வரும் தமிழக மீனவர்களின் உயிர்ப் பிரச்சினையை இந்திய அரசு மிகவும் மெத்தனப் போக்கோடு அணுகுவது மிகுந்த மனவேதனையை அளிக்கிறது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு செவ்வாய்க்கிழமை அவர் எழுதியுள்ள கடித விபரம்,

இந்திய மீனவர்கள் மீது மென்மேலும் தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசைக் கடுமையாக எச்சரிக்க வேண்டியது இந்திய அரசின் கடமை.

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுத்தள்ளுவதும், கொல்லுவதும் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன. ஆனால், நமது மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை நடத்திய பெரும்பாலான துப்பாக்கிச் சூடு சம்பவங்கள், இலங்கைக் கடலோரத்தில் நடந்தவை என்று தங்கள் (பிரதமர்) கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது மனவருத்தம் அளிக்கிறது.

இலங்கையில் தமிழர் ஆதரவு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந் நாட்டு அரசுப் படையால் கொல்லப்பட்டுள்ளார்கள். இந்திய அரசு இந்தச் செயலுக்கு கண்டனம் தெரிவிக்கத் தவறியது அவமானத்துக்கு உரியது.

இதற்கு மாறாக, இலங்கை அரசு தனது இராணுவ தாக்குதல்களைத் தொடர்வதற்கு உதவியாக இந்திய அரசு அவர்களுக்கு ரேடார்களையும், இராணுவத்தளபாடப் பொருட்களையும் தாராளமாக வழங்கியது.

இலங்கை இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு இந்திய அரசு வரவேற்பு அளிக்கிறது. பொன்சேகாவோ, இந்தியாவின் உறுதியான திட்டமிட்ட உதவியோடு எங்களது இராணுவத் தாக்குதலை தீவிரப்படுத்துவோம் என்று சவால் விட்டுப் பேசுகிறார்.

இதற்கு, இந்திய அரசு மறுப்போ, கண்டனமோ தெரிவிக்கவில்லை. மேலும் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்திய அரசின் செயற்பாடு, அணுகுமுறை, எண்ணம் அனைத்தும் இலங்கை அரசின் இனவெறித் தாக்குதலுக்குப் பேருதவியாக இருக்கிறது என்ற எண்ணம் தமிழர்கள் மனதிலே துன்பத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது.

எனவே, இந்திய அரசு இலங்கைக்கு அளித்த ரேடார்களைத் திரும்பப் பெறவேண்டும். இலங்கை அரசுக்கு செய்யும் இராணுவ உதவியையும் உடனடியாக நிறுத்தவேண்டும். (அ-5)



## இலங்கை அகதிகள் 18 பேர் அரிச்சல்முனை வருகை

இலங்கையில் இருந்து 18 அகதிகள் தனுஷ்கோடி அரிச்சல்முனை கடற்கரைப் பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வந்தனர்.

இலங்கை தலைமன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து 5 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆண்கள், 5 பெண்கள், 4 ஆண்குழந்தைகள் , ஒரு பெண் குழந்தை என 18பேர் பேசாலை கடற்கரைப் பகுதியில் இருந்து தலா ரூ.10 ஆயிரம் கொடுத்து இரு பைபர் படகுகளில் அரிச்சல்முனை கடற்கரை பகுதிக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் அங்கிருந்து வான் மூலம் முகுந்தராயர் சத்திரம் காவல்துறை சோதனை சாவடிக்கு வந்தனர்.

இவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி தனுஷ்கோடி காவல் நிலை யத்துக்கு அனுப்பினர். பின்னர் அவர்கள் மண்டபம் முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (அ-5)

## கல்வியியற் கல்லூரி அனுமதி 2008

பின்வரும் மாணவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். இவர்கள் இன்று கல்லூரியில் தமது படிவங்களைப் பெற்று 24.03.2008க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

**ஆரம்பக்கல்வி**

ரீ.தவஜீவிதன் –படித்த வாலிபர் திட்டம், மிருசுவில், எஸ்.விஜிதா–சோமசுந்தரம் வீதி ஆனைக்கோட்டை,வை.ஜெகந்தன்– ஏழாலை தெற்கு ஏழாலை. (அ)

# பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி துடுப்பாட்டம், பந்து வீச்சில் கலக்கல்

(ஹஜானா)

ஹஜானா கிரிக்கெற் சபைத் தலைவர் Xi அணியுடனான பயிற்சியாட்டத்தில் இலங்கை அணி துடுப்பாட்டம், பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டு வலுவான நிலையிலுள்ளது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட வுள்ள இத்தொடரிற்கு முன்னதான 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் ஹஜானா கிரிக்கெற் சபை அணி யுடன் மோதுகின்றது.


திங்கட்கிழமை ஆரம்பமான இப் போட்டி யில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முத லில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி வர்ணபுர, டில்சானின் சதத்துடன் அதன் முத லாவது இன்னிங்ஸில் 5 விக்கெற்றுக்களை மாத்திரமிழந்து 492 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான வர்ணபுர 132 ஓட்டங்களையும் ஆட்டமிழக்கா மல் டில்சான் 101 ஓட்டங்களையும் ஜெயவர் தனா 99 ஓட்டங்களையும் மற்றும் சாமர சில்வா ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய ஹஜானா கிரிக்கெற் சபைத் தலைவர் Xi அணி ஹேரத்தின் துல் லியமான சுழலில் சகல விக்கெற்றுக் களை யுமிழந்து 248 ஓட்டங்களை மாத்திரம் பெற் றது.

விளையாட்டு

இதில் புரோக்ஸ் 68 ஓட்டங்களையும் ஹேய் 61 ஓட்டங்களையும் மற்றும் பிரான் வெல் 44 ஓட்டங்களையுமெடுத்தனர். பந்து வீச்சில் ரங்கனஹேரத் 5 விக்கெற்றுக் களையும் மிரான்டோ 2 விக்கெற்றுக்களை



யும் மற்றும் குலசேகர, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடை பெற்றது. (5)

## மீண்டும் வருகிறார் பாலாஜி

(சென்னை)

இந்திய கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தமிழகத்தைச் சேர்ந்த பாலாஜி, இந் திய அணியில் விளையாடி 3 ஆண்டுகள் ஆகிவிட்டது. 2004ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தின் போது அந்நாட்டு அதிபர் முஷாரப்பையை தனது பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தால் அசரவைத்த பாலாஜி அதன் பிறகு உடல் தகுதி பிரச்சினையால் நீக்கப் பட்டார். இந்நிலையில் இந்திய பிரிமியர் லீக் கில் விளையாட உள்ள சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் கூடுதல் பந்து வீச்சாளராக பாலாஜி சேர்க்கப்பட்டு இருக்கிறார்.

இந்த தகவலை தெரிவித்த சென்னை சுப் பர் கிங்ஸ் அணியின் ஒருங்கிணைப்பாளர் வி.பி.சந்திரசேகர் மேலும் கூறுகயையில், காயத்தில் இருந்து தேறிய பிறகு பாலாஜி தமிழ்நாடு கிரிக்கெற் சங்கத்தின் முதல் தர போட்டிகளில் நன்கு ஆடி வருகிறார். பந்து வீச் சின் போது ஒரேயடியாக பயன்படுத்தாமல் இடைவெளி விட்டு அவரை பயன்படுத்து வோம். பாலாஜி இந்த 'இருபது-20' கிரிக் கெற் றில் வன்மையான ஆயுதமாக இருப்பார் என்றார்.

பாலாஜி இதுவரை 8 டெஸ்டில் 27 விக் கெற்றுக்களும், 29 ஒருநாள் போட்டியில் 34 விக்கெற்றுக்களும் கைப்பற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (5)

## சானியா மிர்சா அதிர்ச்சி தோல்வி

(கலிபோர்னியா)

கலிபோர்னியாவில் உள்ள இந்தியன் வேல்சில் நடைபெற்று வரும் பசுபிக் லைப் ஓபன் டென்னிஸ் போட்டியில் நான்காவது சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இரண்டுமுறை சம்பியனான டானிலா ஹண்ட்சோவாவிடம் சானியா 6-1, 7-6 என்ற செட்கணக்கில் தோல்வியடைந்தார். நேற்று முன்தினம் போட்டியில் இரண்டாவது மற்றும் நான்காவது ஆட்டத்தில் சானியாவை வீழ்த்தி ஹண்ட்சோவா வெற்றி பெற்றார்.

இதையடுத்து ஹண்ட்சோவா காலிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். காலிறுதியில் அவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுடன் மோதுகிறார். கடந்த ஆண்டு நடைபெற்ற பசி பிக் லைப் ஓபன் போட்டியில் ரஷ்யாவின் ஸ்வெட் லானா குஸ்நட் சோவாவை வென்று ஹண்ட் சோவா பட்டம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (5)

## இந்தியன் பிரீமியர் லீக்கிற்கு ஐ.சி.சி.அங்கீகாரம் வழங்கியது

(துபாய்)

இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபையின் இந்திய பிரிமியர் லீக்குக்கு சர்வதேச கிரிக்கெற் சபை (ஐசிசி) அங்கீகாரம் அளித்துள்ளது. எனினும் இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபைக்கு போட்டியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெற் லீக்கிற்கு (ஐசிஎல்) அங்கீ காரம் அளிக்க ஐசிசி மறுத்துவிட்டது.

ஐசிசி நிர்வாகக் குழுவின் இரண்டு நாள் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அதன் புதிய தலைவராக பொறுப்பேற்க வுள்ள டேவிட் மார்க்கன் இதனைத் தெரிவித்தார்.

இங்கிலாந்தில் நடத்தப்படும் கவுண்டி சம் பியன்ஷிப் போல இந்திய பிரிமியர் லீக் (ஐபி எல்) அதிகாரபூர்வமானது என்றார். ஆனால் ஐசி எல்லை அங்கீகரிக்க இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபை மறுத்துவிட்டதால் அதற்கு ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்றார். இந் திய பிரிமியர் லீக் அணிகள் தனியாருக்கு சொந்தமானது என்பதில் சில பிரச்சினைகள் உள்ளது என்ற போதிலும் அதில் பல்வேறு நலன்களும் இருப்பதாக டேவிட் மார்க்கன் தெரிவித்தார்.

ஐபிஎல்-ன் உரிமையாளர் என்ற முறை யில் இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுசபை ஐசிசி அங்கத்தினர்களுடன் விளையாடுவ தற்கு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் என் றும் அவர் கூறினார். இந்திய பிரிமியர் லீக் கிற்கு என தனியாக நடத்தை விதிமுறைகளை யும் ஊழலுக்கு எதிரான மற்றும் ஊக்க மருந்து பயன்படுத்துவது தொடர்பான நடத்தை விதி முறைகளையும் வகுக்குமாறு சர்வதேச கிரிக்கெற்சபை கேட்டுக்கொண்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளுக்கு இந்திய பிரிமியர் லீக்கின் செயல்பாடுகளை ஐசிசி கண்காணிக்கும் என் றும் அவர் தெரிவித்தார். (5)

## ஹைடனை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் ஹர்பஜன்சிங் தெரிவிப்பு

(மும்பை)

இந்திய கிரிக்கெற் அணி அவுஸ்திரேலியா வில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிய போது இந்திய வீரர் ஹர்பஜனுடன் அவுஸ்தி ரேலிய வீரர்கள் ஹைடன், சைமண்ட்ஸ் மோதிக் கொண்டனர்.

ஹர்பஜன்சிங் அருவருக்கத்தக்கவர் என்று ஹைடன் விமர்சித்து இருந்தார். இதற் காக அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபை அவரை எச்சரிக்கை செய்தது. அதே நேரத்தில் ஹை டனை மிகப்பெரிய பொய்யர் என்று ஹர்பஜன் சிங் கூறி இருந்தார்.

இதற்கிடையே தனது செயலுக்கு ஹைடன் வருத்தம் தெரிவித்தார். ஹர்பஜன் சிங்குடன் சமாதானமாக செல்ல விரும்புகிறேன் என்றார். இதை ஹர்பஜன்சிங் வரவேற்றுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

என்னுடன் சமாதானமாக செல்ல விரும்பு வதாக ஹைடன் விரும்புவது மகிழ்ச்சி அளிக் கிறது. அவர் என்னை சந்தித்து பேசுவதாக கூறியுள்ளார்.

அவரை சந்தித்து பேசுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய தரப்பில் இருந்து பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டது இதெல்லாம் கிரிக்கெற்றில் நடக்க கூடியது தான். (5)

## துளிகள்

### முன்னாள் ஆஸி.வீரர் பிரவுன் மரணம்

அவுஸ்திரேலியாவில் வாழும் அதிக வய துடைய டெஸ்ட்வீரர் என்ற சிறப்பை பெற்றி ருந்த 95 வயதான பில் பிரவுன் நேற்று முன் தினம் மரணம் அடைந்தார். 1946ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கு அவர் அவுஸ்திரேலிய அணியின் தலை வராக பணியாற்றி இருக்கிறார். 22 டெஸ்ட் விளையாடி 1592 ஓட்டங்கள் எடுத்துள் ளார்.

### பாகிஸ்தான் தொடர்

பாதுகாப்பை காரணம் காட்டி அவுஸ்தி ரேலிய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததை யடுத்து, அங்கு பங்களாதேஷ் அணி சென்று விளையாட இருக்கிறது. ஏப்ரல் 6ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வங்களாதேஷ் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒரு நாள் போட்டி மற்றும் இருபது -20 கிரிக் கெற் றில் பற்கேற்கவுள்ளது. லாகூர், முல்தான், பைசலாபாத், கராச்சி ஆகிய இடங்களில் இப் போட்டி நடக்கிறது

### மீண்டும் டரல் ஹெயர்

அவுஸ்திரேலியாவின் சர்ச்சைக்குரிய நடு வர் டரல் ஹேயர் மீண்டும் ஐ.சி.சி.யின் முதன்மை நடுவர் குழுவில் (எலைட் பேனல்) நியமிக்கப்பட்டு இருக்கிறார். கடந்த 2006ஆம் ஆண்டு ஓவலில் நடந்த டெஸ்டில் பந்தை சேதப்படுத்திய பாகிஸ்தான் வீரர்கள் மீது புகார் கூற, அவர்கள் விளையாட மறுத்ததால் இங்கி லாந்து வெற்றி பெற்றதாக அறிவித்து சர்ச்சையை ஏற்படுத்தியவர் ஹேயர்.

ஆனால் அவர் கூறிய புகார் தவறு என்று தெரிய வந் ததால் நடுவர் பணியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதன் பின்னர் 6 மாத காலம் உறுப்பு நாடுகளின் போட்டிகளில் நடுவராக செயல் பட்டார். இதில் திருப்தி ஏற்பட்டதை தொடர்ந்து 18 மாத கால இடைவெளிக்கு பிறகு அவரை மீண்டும் சர்வதேச நடுவர் பணிக்கு ஐ.சி.சி. அழைத்துள்ளது. (5)

## முதலாவது ஒருநாள் போட்டியில் அயர்லாந்தை வென்றது பங்களாதேஷ்

(மிர்பூர்)

அயர்லாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 8 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. பங்களா தேஷிற்கு சுற்றப்பயணம் மேற்கொண்டுள்ள அயர்லாந்து அணி மூன்று ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் மிர்பூரில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக களமிறங்கிய போடர் பீல்ட் (1), ஸ்ட்ரைடம் (8) இருவரும் சொற்ப ஓட்டங்களில் மொர்டாசா பந்தில் ஆட்ட மிழந்தனர்.

மோர்கன் (35) ஓரளவு ஓட்டங்கள் சேர்ந்து வெளியேறினார். அடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்களும் அணியின் ஓட்ட எண்ணிக் கையை உயர்த்த முடியாமல் பெவிலியன் திரும்பினர். குசாக் அதிகபட்சமாக 38 ஓட்டங்கள் எடுத்து மொர்டாசா பந்தில் ஆட்டமிழந்தார். அணித் தலைவர் ஜோன்ஸ்டன் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்கள் எடுத்தார். 50 ஓவர்கள் முடிவில் அயர்லாந்து அணி 7விக்கெற் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்தது. பங்களாதேஷ் பந்துவீச்சாளர் மொர்டாசா 3 விக்கெற்றுகளை சாய்த்தார்.

பங்களாகேஷ் அணி 186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் இலக்கோடு களமிறங்கியது ஆரம்ப ஆட்டக்காரர் தமிம் 13 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். நபீஸ்



சிறப்பாக விளை யாடி ஓட்டங்கள் சேர்த்தார். அப்தாப் 11 ஓட்டங்களில் வெளியேறிய நிலையில் நபீசும், அணித் தலைவர் அஷ்ர புல்லும் ஜோடி சேர்ந்து அயர்லாந்தின் பந்து வீச்சை வெளுத்து வாங்கினர். இவர்களை பிரிக்க அயர்லாந்து பந்து வீச்சாளர்கள் கடும் முயற்சி எடுத்தும், கடைசிவரை முடி யவில்லை. இருவரும் அரை சதம் கடந்ததுடன் மூன்றா வது விக்கெற்றுக்கு 130 ஓட் டங்கள் சேர்த்து மிரட்டினர். 39.5 ஓவர் களில் பங்களா தேஷ் இரண்டு விக் கெற் றுக்களை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

சிறப்பாக விளையாடிய நபீஸ் 90 ஓட்டங்களுட னும், அணித்தலைவர் அஷ்ரபுல் 64 ஓட்டங்களுட னும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அயர்லாந்து சார்பில் லாங்போர்ட் ஜான் ஸ்டன் தலா ஒரு விக்கெற் வீழ்த்தினர். மூன்று விக்கெற் றுக்களை வீழ்த்திய பங்களா தேஷ் அணியில் பந்துவீச்சாளர் மொர்டாசா ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (5)


# ஈராக் மீதான போர் நியாயமானது என்கிறார்

## அமெரிக்க அதிபர் புஷ்

(வோஷிங்டன்)

ஈராக் மீது தொடுக்கப்பட்ட போரை அமெரிக்க அதிபர் புஷ் நியாயப்படுத்தியுள்ளார்.

இந்த போர் காரணமாக கூடுதல் செலவு



எற்பட்டு பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் புகாரை புஷ் மறுத்துள்ளார்.

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த தன் ஐந்தாம் ஆண்டு தினமான நேற்று புஷ் அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனில் உரை நிகழ்த்தினார்.

ஈராக் போரில் அமெரிக்காவுக்கு வெற்றி கிடைத்துள்ள போதிலும் சிலர் அதை ஏற்க மறுப்பதாக புஷ் தெரிவித்தார்.

இந்த போரில் அமெரிக்கா தோல்வியை தழுவி வருவதாக கூறி வந்தவர்கள், மக்கள் அதை ஏற்கவில்லை என்றவுடன் இப்போது இந்த போர் காரணமாக கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது என்றும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறி வருவதாக புஷ் தெரிவித்தார்.

போருக்கு ஆகும் செலவு குறித்த கணிப்புகள் மிகைப்படுத்தப்பட்டவை என்றும் புஷ் தெரிவித்துள்ளார். ஈராக்கில் தங்களது எதிரிகளை வீழ்த்துவதற்கு இந்த செலவு மிகவும் அவசியமானது என்றும் அவர் தெரிவித்தார்.

ஈராக்கில் செயல்பட்டு வரும் தங்களது எதிரிகளை தொடர்ந்து செயல்பட அனுமதித்தால் தற்போது குறைந்து காணப்படும் பயங்கரவாத தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கும் என்றும் செல்வாக்கை இழந்துள்ள அல்கொய்தா மீண்டும் செல்வாக்கு பெற்று ஈராக் மட்டுமின்றி உலகம் முழுவதிலும் தாக்குதல் நடத்தி உலகப் பொருளாதாரத்தை பாதிக்கச் செய்யும் என்றும் புஷ் கூறினார்.

சதாம் உசேனை ஈராக் அதிபர் பதவியிலிருந்து அகற்றியது சரியான முடிபு என்றும் அமெரிக்கா இந்த போரில் நிச்சயம் வெற்றி பெறும் என்றும் புஷ் நம்பிக்கை தெரிவித்தார். (அ-5)

# பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் சர்தாரி? இன்று முடிபு தெரிந்து விடும்

### பாக் மக்கள் கட்சி அறிவிப்பு

பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் யார் என்பதில் இன்னும் மர்மம் நிலவுகிறது. பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவரான மக்தும் அமின் பாஹிம் பெயர் பிரதமர் பதவிக்கு அடிபட்டது. இந்நிலையில் அவரே தற்போது போட்டியிலிருந்து விலகி பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் ஆசிப் அலி சர்தாரி பெயரை முன்மொழிந்துள்ளார். எனவே யார் அடுத்த பிரதமர் என்பது இன்று தெரிந்துவிடும்.

தற்போதைய நிலையில் பாகிஸ்தானில் அமையவுள்ள கூட்டணி அரசுக்கு தலைமை

## உலக தரிசனம்

தாங்கப் போவது பாகிஸ்தான் மக்கள் கட்சிதான். இந் நிலையில் பிரதமர் பதவி மீது சர் தாரி ஆர்வமாக இருப்பதாக செய்திகள் உலா வருகின்றன. எனவே அவருக்கு ஆதரவாக செயல்பட பாஹிம் திட்டவட்டமாக உள்ளார்.

சர்தாரியை திங்கட்கிழமை இரவு சந்தித்த பாஹிம், பிரதமர் பதவிக்கு சர்தாரியை முன்மொழிந்ததாக தெரிவிக்கப்படுகிறது. நிருபர்களுக்கு பேட்டி அளித்த பாஹிம் சர்தாரி பெயரை பிரதமர் பதவிக்கு முன்மொழிந்துள்ளேன். இனி முடிவு சர்தாரியிடம் உள்ளது என்றார். எனினும் சர்தாரியின் நிலை தொடர்பாக கட்சி தரப்பிலிருந்து எந்த விதபதிலும் வரவில்லை.

ஆனால் அடுத்த பிரதமர் யார் என்பது இன்று அறிவிக்கப்படும் என்று பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மூத்த தலைவர் சையது குர்ஷித் அகமது தெரிவித்துள்ளார். பிரதமர் பதவிக்கான வேட்பாளர்களாக 5 பேர் பரிசீலனையில் உள்ளனர். கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்றார் சையது. (அ-5)

## புதிய மந்திரி சபையில் தமிழருக்கு இடம் இல்லை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் குறைந்த பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பிரதமர் படாவி தன் மந்திரி சபையில் இடம்பெறப்போகிறவர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளார். இதில் தமிழர் ஒருவருக்கு கூட இடம் அளிக்கப் படவில்லை.

இது வரை மந்திரியாக இருந்த ஒரே தமிழரான சாமிவேலு இந்த தேர்தலில் தோல்வி அடைந்தார். தமிழர்கள் 4 பேர் வெற்றி பெற்ற போதிலும் அவர்களில் ஒருவருக்கு கூட இடம் அளிக்கப்படவில்லை.

பிரதமர் படாவி நிதி இலாகாவை இந்த முறையும் தன் வசம் எடுத்துக்கொண்டார். கடந்த முறை அவரது மந்திரிசபையில் 90 பேர் இடம் பெற்று இருந்தனர்.


இந்த முறை 68 பேர் மட்டுமே மந்திரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பாதிப்பேர் புதுமுகங்கள் துணைப் பிரதமராக நஜீப் துன் ரசாக் தொடர்ந்து நீடிக்கிறார். இராணுவ இலாகாவும் அவர் வசம் தொடர்ந்து ஒப்படைக்கப்படுகின்றது. நீண்டகாலமாக வர்த்தக மந்திரியாக இருந்த ரபீதாக் அஜீசுக்கு இந்த முறை மந்திரி பதவி வழங்கப்படவில்லை. (அ-5)

## பணயம் வைக்கப்பட்டிருந்த படையினர் மீட்கப்பட்டனர்

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூரில் அமைந்துள்ள பிரதான சிறைச்சாலையில் பாதுகாப்புப்படையினர் முற்றுகையிட்டு அங்கு கைதிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த இரண்டு படையினரையும் மீட்டுள்ளனர்.

1970ஆம் ஆண்டுநிறுவப்பட்ட இந்தச்சிறைச்சாலையில் அல்கொய்தா தலிபான் தீவிரவாதிகள் என்று சந்தேகத்தின் பேரில் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலை அதிகாரிகளுக்கெதிராக கடந்த சில நாட்களாக கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

அத்துடன் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஆப்கானிஸ்தான் படையினர் இருவர் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கபட்டிருந்தனர். நிறைச்சாலையை சுற்றிவளைத்த ஆப்கானிஸ்தான்பாதுகாப்புப்படையினர் பணயக்கைதிகளை மீட்டுள்ளதுடன் சிறைச்சாலையை தமது கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். (அ)





சிவமயம்

அருள் தரும் அன்னை
ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
தாவடி-கொக்குவில்

புனருத்தாரண நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேகம்

பங்குனித் திங்கள் 7ஆம் நாள்

20.03.2008 வியாழக்கிழமை

காலை 9.30மணிமுதல் 11.30 மணிவரை

அடியார்களே!

அண்டசாசரங்களை அன்புகொண்டு அருளாட்சி புரியும் அன்னை ஈரேழு உலகத்துள் இணையிலாச் சிறப்புமிக்க இப்பூவுலகில் அடவி, அருவி, ஆவினம், மலை, கடல், கனி, மொழி, கதிர், கலை, புலம் புண்ணியர் கூடும் மந்திரவாசல் நிறை இலங்கைத் தீபகற்பத்தின் வடபால் சூழும் சுடர் ஏரி நடுவண் யாழ்ப்பாணத்தின் கண்ணே திசை எட்டும் துரவும், தொழிலும் பிரியா செழிப்பும் சேர் கொக்குவில் கிராமத்தில் கதிரவன் பரிவும், கார்முகில் கனிவும்சேர எழில்மிகு தாவடிபதி தன்னில் முனிவரும், தேவரும் போற்றும் முக்கண்ணி வேதியர் வழி ஆதரிக்கும் அன்னை ஸ்ரீ வடபத்திர காளித்தாய் அடியார்கள் சூழும் வினை தீர்க்க அமைந்த பெருங்கோயிற் குடமுழுக்குப் பெருவிழா!

நிகழும் சர்வசித்து வருஷம் பங்குனி மாதம் 7ஆம் நாள் (20.03.2008) வியாழக்கிழமை சதுர்த்தசி திதியும், பூர நக்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 9.30மணிமுதல் 11.30 மணிக்குள் அமைந்த இடபலக்ன சுப முகூர்த்த வேளையில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது.

அடியார்கள் அன்னை காளியின் அருட் கும்பாபிஷேகப் பொலிவு கண்டு அருள் பெருக முக்தி ஆனந்தம் பெற்று வாழ்வீர்களாக!

*20.03.2008*-வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு யாக பூஜை, மூல ,காயத்ரீ மந்திர ஹோமங்கள், பூர்ணாகுதி, உபசார பூஜை. காலை 9.30மணிக்கு ஸ்தூபி கும்பாபிஷேகம், 10.00 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் ,10.30 மணிக்கு மங்கள தரிசனம், ஆசீர்வாதம் 12.00 மணிக்கு மஹா அபிஷேகம் உபசாரபூஜை .
1.00 மணிக்கு அன்னதானம் (உபயம்:அமரர் வீ.நாகலிங்கம் ஆசிரியர் குடும்பத்தினர்) மாலை. 3.00மணிக்கு அலங்கார பூஜை, சகஸ்ரநாம அர்ச்சனை, 3வாசல் புதிய முத்துச்சிவிகையில் வீதியுலா. மாலை 6.00மணிக்கு சிறப்பு கௌரவங்கள், பரிசில் வழங்கல்.

20.03.2008 வியாழக்கிழமை காலை 8.30-9.15மணிவரை நர்த்தனாஞ்சலி வழங்குவோர், இணுவையூர் குமார நர்த்தனாலய மாணவிகள்
*அனுசரணை* : கலைவாணி ரெக்ஸ் ரைல், நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மண்டலாபிஷேகம் 15 தினங்கள் நடைபெறும்.
மாலை3.30மணி அபிஷேகம்.
4.30 மணிக்கு சகஸ்ரநாம அர்ச்சனை.
5.30 மணிக்கு திருவீதியுலா

தாவடி தெற்கு.கொக்குவில்
26.03.2008
T.P: 021 2225135

பிரம்மஸ்ரீ.நா.சசிதரசர்மா(ரவிஜயா)
ஆதீனகர்த்தா

அனுசரணை வழங்குவோர்:-

செல்வி நகை அகம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களை 22 கரட்டில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
1/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/881)

இளவரசி சேலைச் சோலை
பட்டுப் புடவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P: 021 2222503 (C/882)

வாழ்க்கை முழுவதும் வளமுடன் வாழ
அண்ணா ஜீவாகாரம்
போசாக்குக் குறைவு
வளரும் குழந்தைகளுக்கும்.
கர்ப்பிணித் தாய் மாருக்கும் சிறந்த போசாக்குமிக்க உணவு
அண்ணா தொழிலகம் - இணுவில்
(C/883) தொலைபேசி: 021 222 3565

ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
தரமான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பாடசாலை வீதி, தாவடி தெற்கு,
கொக்குவில்.
உரிமையாளர் :- ஸ்ரீஸ்கந்தராஜா
(C/884)

உதயன் கேபிள் T.V விஷன்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்
0777651661
(C/885)

க.ஜெயகுமாரன்
இணுவில்
(C/886)

நாவில் எலும்புகள் கிடையாது–ஆனால், அது எலும்புகளை நொறுக்கவல்லது.
–அல்பேனியா

வலம்புரி

## வடக்கைக் கைப்பற்றும் முடிபு மனிதப் பேரவலத்திலேயே முடியும்

மிக விரைவில் வட பகுதியை படையினர் கைப்பற்றி விடுவர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கு பதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

வடக்கை கைப்பற்றுவோம் என பேரினவாதக் கட்சிகள் அல்லது அமைச்சர்கள் யாரேனும் கூறியிருந்தால் அதனை அப்படியே விட்டுவிடலாம். ஆனால் விரைவில் வடக்கை படையினர் மீட்டு விடுவர்கள் என கூறியிருப்பவர் இந்த நாட்டின் ஜனாதிபதி.எனவே அதனை ஒரு சாதாரணமான விடயமாக கருதிவிட முடியாது.

இவ்வாறு கூறுவதன் பொருள், வடக்கை படையினர் கைப்பற்றுவர் என ஜனாதிபதி கூறியிருப்பதால் அது நிறைவேறி விடும் என்பதற்காக வல்ல.

மாறாக இவ்விதம் ஜனாதிபதி கூறியிருப்பதால் வடபகுதியில் கடும் போர் மூளப்போகிறது என்பதே அவரின் கூற்றை முக்கியப்படுத்துவதற்கான காரணமாகும்.

ஜனாதிபதி கூறுவதுபோல் வடக்கைக் கைப்பற்றுவது என்பது சாதாரணமான விடயமல்ல. ஏனெனில் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. அவர்கள் என்னமும் பலமாகவே இருக்கிறார்கள் என அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியிருந்தமை இங்கு நோக்குதற்குரியது.

சர்வகட்சிக் குழுவின் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண இனப்பிரச்சினைக்கான தீர்வு சமாதானத்தினூடாகவே அடையப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

ஆனால், திஸ்ஸ விதாரணவின் கருத்தை நிராகரிக்கும் வகையில், படையினர் விரைவில் வடக்கைக் கைப்பற்றுவர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு நாட்டு மக்களை மிக மோசமாகப் பாதிப்படையச் செய்யும். வடக்கில் போர் வேகம் எடுக்குமாயின் அதனால் பொதுமக்கள் பேரழிவைச் சந்திப்பர்.

அந்த அழிவுகளின் பின்னர் யார் வெற்றி பெற்றாலும் அந்த வெற்றி அனைத்தும் காலாகாலமாக மன வேதனையையும் விரக்தியையும் தருவதாகவே அமையும்.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் அதன் பாதிப்பு வடக்கில் மட்டும் இருக்குமென யாரேனும் கருதி விடலாகாது. இலங்கை முழுவதும் அதன் பாதிப்பும் – விளைவும் இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது அறிவிப்பை மாற்றி, பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறியது போல சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க முன்வரவேண்டும்.

அதுவே நாட்டிற்கும் மக்களுக்கும் நல்லாட்சிக்கும் நன்மை பயக்கும்.

# அதிகரித்த இராணுவ மயமாக்கலால் கட்டுக்கடங்காத நிலை ஏற்படும்

## மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா

(கொழும்பு)

இலங்கையில் இராணுவ மயமாக்கல் அதிகமாக தற்போது இடம்பெற்றுள்ளது. அதிகரித்த இராணுவ மயமாக்கலானது கட்டுக்கடங்காத நிலைமையை ஏற்படுத்திவிடும் என்று முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரலும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சமூக சேவை அமைப்பான லக்ஜய மன்றத்தின் தலைவருமான ஜானக பெரேரா தெரிவித்தார். கொழும்பு 7இல் அமைந்துள்ள தொழிலாளர் சார் சங்கங்களின் அமைப்பு கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மேலும் கருத்துவெளியிடுகையில் தெரிவித்ததாவது,

தற்போது அளவுக்கு அதிகமாக இலங்கையில் இராணுவமயமாக்கல் இடம் பெற்றுள்ளது. அதனை நான் எதிர்க்கின்றேன். அனுரத்த ரத்வத்தை, ஜனரல் தளுபத்தை ஆகியோரின் கால கட்டத்திலும் அதிகளவான இராணுவமயமாக்கல் இருந்தது. இவ்வாறான அதிகரித்த இராணுவ மயமாக்கலானது நிலைமையை கை மீறி கட்டுப்பாட்டை இழந்து செல்லும் நிலையை தோற்றுவித்து விடும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினரும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற முக்கியஸ்தர்களும் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் இந்த சமூக அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. மாறாக இந்த அமைப்பு யுத்தத்தை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்குகின்ற அமைப்பல்ல. இந்த அமைப்பின் ஏனைய அங்கத்தவர்களாக பிரபல சட்டத்தரணி லலித் கம்லத் மதங்களின் பேரவையைச் சேர்ந்த சேர்லி திசேரா, கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் தஸ நாயக்க, பிரபல வர்த்தகர் கித்சிறிடி சில்வா, கலாநிதி விஜேதுங்க, டிரோன் வீரக் கொடி போன்றோர் அங்கம் வகிக்கின்ற நிலையில் சமூகத்தின் சகல தரப்பினரும் எம்முடன் கைகோர்த்துள்ளனர். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்து அவர்களை இந்த சமூகத்தில் மீண்டும் இணைப்பதற்கான சமூகப் பொறுப்பு என்ன என்று காண்பிப்பதே தமது நோக்கம். இன்று யுத்தம் என்பது சகல தரப்பினரையும் பாதிக்கும் விடயமாகவுள்ளது. வடக்கு கிழக்கில் சண்டையிடும்முப்படையினர், பொலிஸார் மட்டுமின்றி கொழும்பில் குண்டு வெடிக்கும் போது அதில் பொது மக்களும் அகப்படுகின்றனர். சிங்களவர் தமிழர்களாக இருக்கட்டும் அன்றேல் பௌத்தர் கிறிஸ்தவராக இருக்கட்டும் குண்டு வெடித்தால் அனைத்து தரப்பினரும் அதில் பாதிக்கப்படுவர்.

(அ-5)

# கிறிஸ்து தந்த அன்பை அனைவரோடும் பகிர்ந்து வாழ்வோம்

தலைவனுக்கு பணி செய்வது உலக இயல்பு. குருவுக்கு கீழ்ப்படிவது நடைமுறை. கடவுளுக்குப் பணிவது பக்தி முறை. ஆனால் அரசரும் போதகரும் ஆண்டவருமாகிய இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவியது பணிவை, அன்பை வெளிப்படுத்திய புதிய முறை.

அக்காலத்தில் யூத முறைப்படி ஒருவரின் பாதங்களைக் கழுவுவது அடிமைகள் செய்யும் தொழிலாகும். விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களின் கால்களை அவ்வீட்டின் வாசலில்வைத்து அடிமைகள் கழுவியபின்பே உள்ளே நுழைவர். விருந்தினதும் இடத்தினதும் நிகழ்வினதும் தூய்மையை வெளிப்படுத்தவும் விருந்தாளிகளுக்கு மதிப்பளிக்கவும் இவ்வாறு செய்வது வழக்கம்.

### தவக்காலப் பொழிவு

பணியேற்பதற்கல்ல பணிபுரியவே வந்தேன் என்று இயேசு மொழிந்த படியே அடிமையின் கோலம் கொண்டு சீடர்களின் பாதங்களைத் தூய்மைப்படுத்தி அன்புக்கு முன்மாதிரிகாட்டினார். 'உங்களுக்கு அன்பு நான் செய்தது போல நீங்களும் அன்பொருவருக்கொருவர் செய்வீர்' என சீடர்கள் வழியாக அனைவருக்கும் அழைப்பு விடுகின்றார்.


அதேவேளை, திருச்சபையின் விசுவாசப் பயணத்திலே இன்றைய நாள் மிகவும் உயர்வான புனித நாளாகும். இயேசு மரணிப்பதற்கு முதல் நாளான வியாழக் கிழமை இரவுணவின் போது அன்பின் அடையாளமாகவும் தமது உடனிருப்பை உணர்த்தும் உன்னத அருட்சாதனமாகவும் உறவின் சின்னமாகவும் பகிர்தலின் அடையாளமாகவும் சமத்துவத்தின் வெளிப்பாடாகவும் அப்பவடிவான திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய தூய நாளாகும்.

### இன்று புனித வியாழன்

தமது இவ்வுலகப் பணிவாழ்வின் நினைவாகவும் தமது அங்கீகாரத்துடன் குருத்துவத்தை ஆரம்பித்து வைத்து திருப்பலியையும் நற்கருணை விருந்தையும் உருவாக்கினார். அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி கூறி அதைப் பிட்டு அவர்களுக்கு கொடுத்து 'இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து இந்தக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலை நிறுத்தப்படும் புதிய உடன்படிக்கை (லூக் 22: 19-20) என்று கூறி தமது உடலையும் குருதியையும் மனுக்குலத்தின் மீட்புக்காக உவந்தளித்தார்.

தன்னையே தாழ்த்தி எமக்காக தம்மை அர்ப்பணித்த தியாகச் செம்மலுக்கு நாம் செலுத்தும் கைமாறு நன்றிக் கடன் என்ன?

பொறாமையும் விரோதமும் ஆதிக்கமும் பகைமையும் அன்புக்குத்தடை போடும் சுவர்களாகும். தியாகமும் பணிவும் தாழ்ச்சி யும் கருணையும் பரிவும் அன்பை



வலுப் படுத்தும் ஆற்றல் மிக்கவை. தூய அன்பு உயர்வு– தாழ்வு பார்க்காது வறுமை –சிறுமை நோக்காது.

பட்டம், பதவி, பணம், பிறர் துதி தேடும் இவ்வுலகில் நாம் எப்படிப்பட்ட மன நிலையோடு, அன்பை பரிமாறுகிறோம்? நாமும் கிறிஸ்தவர்கள் என்பதற்கு சிறந்த வெளியடையாளம் அன்பு செலுத்துவதும் எம்மைத் தாழ்த்தி பணிபுரிவதுமே. இதுவே இயேசுவின் அர்ப்பணத்திற்கு நாம் செலுத்தும் நன்றி.

நற்கருணையில் இயேசு உயிர் உடலாக வீற்றிருக்கிறார் என்பதை விசுவாசித்து ஆராதிப்போம். அன்பெனும் சங்கிலியால் அனைவரையும் பிணைத்து இறைவனோடு சங்கமமாவோம்.

எஸ்.யேசுதாஸ்.

# மண்ணுலகின் நிரந்தர சாட்சி பகவான் பாபா



தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் இறைபெருமான் அல்லாவை நோக்கி ஐந்து நேர தொழுகையை ஒழுங்காக செய்து வந்த முகமதியர் ஒருவர் விண்ணு லகு அடைந்தார் . விண்ணுலகை அடைந்த அவரை இறைபெருமான் தன்னருகே அழைத்து உனக்கு மோட்சம் அளிக்கிறேன் என்றார். முகமதியரும் இறை பெருமானுக்கு நன்றி கூறி வணங்கி மோட்சவாயிலை நோக்கினார் . அப்போது இறைபெருமான் அவரை நோக்கி, 'உமக்கு ஏன் மோட்சத்தை அளித்தேன் என அறிவீரோ?' என்றார் .முகமதியரும் 'இறைவனே , நான் ஐந்து நேர தொழுகையையும் ஒழுங்காக செய்தேன். அதன் பலன்தான்' என்றார். அதற்கு இறை பெருமானும் 'அன்பரே பூவுலகில் எல்லோரும் தொழுகை செய்கிறார்கள் அவ்வாறாயின் எல்லோருமே மோட்சம் கண்டு விடுவார்கள். மோட்ச வீடு இப்படி ஒரு சில புண் ணியவான்கள் வாசம் செய்யும் வெறு வீடாக இருக்கவே இருக்காது. ஆனால் நான் உனக்கு மோட்சமளித்ததன் காரணம் , ஒரு நாள் உதய தொழுகைக்கு நீர் செல்லும் போது வழியில் ஒரு பூனைக் குட்டி மழையில் நனைந்து குளிரால் நடுங்கிக் கொண்டு கிடந்தது. அதன் மீது இரக் கம் கொண்ட நீர் இறக்கும் தறுவாயில் இருந்த அக் குட்டியை தூக்கி உன்நெஞ்சோடு அணைத்து உதய தொழு கையை மறந்து வீட்டுக்கு சென்றீர். அன்று நீர் நான்கு நேர தொழுகையே செய்தீர். ஆனால் நடுங்கிய அப்பூனைக்குட்டி உன் நெஞ்சுச் சூட்டில் ஈரமுலர்ந்து குளிர்நடுக்க மற்று துள்ளிக் குதித்தோடியது. அதற்காகவே உனக்கு மோட்சம்' என்றார் இறைபெருமான் அல்லா.

தவத்தாலோ புண்ணிய தலங்களுக்கு செல்வதாலோ புனித நூல்களைப் படிப்பதாலோ இறையடி எய்துவது இயலாத காரியம் .சேவை மூலமாகவே ஒருவன் தனது வாழ்க்கையினைப் புனிதப்படுத்தமுடியும். 'பலனை எதிர்பார்க்கும் சேவை அருவருக்கத்தக்கது. பலன் கருதாத சேவை வரவேற்கத்தக்கது' உண்மையான சேவையென்பது அனைத்தும் இறைவனின் பணியென செய்வதுதான் பகவான் இப் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளார். நாங்கள் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம் .ஆனால் தெய்வத்தை ஏமாற்ற முடியாது. பகவான் இம் மண்ணுலகில் நிரந்தரசாட்சி சேவை செய்தேன் என்று கர்வம் கொள்ளுதல் அறியாமை எனலாம். எல்லாவற்றிற்கும் இறைவனே பொறுப்பு என்றே எண்ண வேண்டும்.

துன்ப துயரம் நம்மை நெருங்க நாமே அதற்கு காரணமானவர்கள். இருந்தும் புடம் போட்டு நம்மை தூய்மையாக்கு வதற்கே இறைவன் செய்யும் நடவடிக்கை அது .ஒருவர் தன் வாழ் நாளில் செய்யும் செயலே நன்மை தீமை எனும் வங்கிகளில் வைப்புச் செய்யப்படுகிறது. நாம் செய்யும் பாவச் செயல்கள் ஏழு பிறப்பிலும் மீளப் பெறமுடியாத வைப்பீடாகின்றது. இதை விடுத்து துன்பம் கண்ட வேளைகளில் இறைவ்னை தூற்றுகின்றோம். எது வந்தாலும் அதற்கு காரணம் தானே என்பதனை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஜெய்சாயிராம் – யாதவன்–

## தமிழர்களுக்கு முக்கியத்துவம்...

ரீதியாக இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாக தீர்க்க முடியாதென தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் பிரதமர் மன்மோகன் சிங் பேச்சுவார்த்தை மூலமே இனப் பிரச்சினையை தீர்க்க முடியும் எனக் கூறியுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்ச் சமூகம் உள்ளிட்ட அனைத்து சமூகத்தாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலுள்ள தமிழ்ச் சமூகத்திற்கு முக்கியத்துவம் வழங்கியே இலங்கைக்கு உதவிகளை வழங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் முதற் கட்டமாக 13-வது திருத்த சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் திட்டத்தை வரவேற்கிறோம். இது தமிழ் மக்களுக்கு சில அதிகாரங்களை வழங்கும் என இந்தியப் பிரதமர், வை.கோவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(ச-5)



யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் பரிசளிப்பு நிகழ்வில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## காணாமல் போதல்...

பகிரங்கப்படுத்தி பகிர்ந்து கொண்டமையையும் தனது முழுக் கண்டறிதல்கள் தொடர்பில் தான் அரசுடன் நடாத்தும் கருத்தாடல்கள் மட்டில் வெளிவிவகார அமைச்சின் தவறான தகவலினையும் ஐ.சி.ஆர்.சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

நீதிக்கு புறம்பான கொலைகளும், காணமல் போதலும் இலங்கையில் இடம்பெறும் பயங்கரமான தகாத நிகழ்வுகளின் ஒரு பகுதிகளாகிவிட்டன. இவை நிறுத்தப்பட வேண்டும் என ஐ.சி.ஆர்.சியின் தெற்காசிய நாடுகளின் நடவடிக்கைகள்ளுக்கு பொறுப்பான ஐக் டி மய்யோ குறிப்பிட்டுள்ளார்.

இவை தொடர்பில் ஐ.சி.ஆர்.சி., சம்ப்ந்தப்பட்ட அதிகாரிகளுடன் அந்தரங்கமாகவும் நேரடியாகவும் உரையாட முற்படுகின்றது.

இதன் காரணமாகவே இலங்கையில் நடைபெறும் பல காணாமற்போதல் சம்பவங் கள் மட்டில் நாம் கருத்துக்களை பகிரங்கமாக தெரிவிப்பதில்லைஎனவும்அவர்தெரிவித்தார். ஞ

## வானியல் விஞ்ஞான...

இவர் கடந்த 50 வருடங்களிற்கு மேலாக இலங்கையில் தங்கியிருந்து சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வானியல் ஆய்வுக் கட்டுரைகளையும் நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும் இதுவரை வெளியிட்டிருப்பதோடு பிரபலமான பல சர்வதேச விருதுகளையும் உள்ளூர் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

இலங்கை வெளிநாட்டமைச்சின் அனுசரணையில் கொழும்பில் இடம்பெற்ற தனது 90-வது பிறந்ததினத்தன்று கருத்து வெளியிட்டிருந்த இவர்,

கடந்த 25 வருடங்களிற்கு மேலாக இனமோதலால் பாதிப்படைந்திருக்கும் இலங்கையில் நிரந்தர சமாதானம் மலர வேண்டும் என்பது தனது இறுதி ஆசைகளில் ஒன்று என்று தனது ஆதங்கத்தினைவெளிப்படுத்தியிருந்தார்.

செய்ம்மதித் தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்திய முன்னோடி என்ற ரீதியில் உலகப் புகழ்பெற்ற இவர், ஆழ்கடலில் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காக 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தார்.

1979ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டுவரை இவர் கொழும்பு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்திருப்பதோடு, இலங்கைப் பிரஜை ஒருவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் அதியுயர் விருதுகளான 'சாஹித்ய ரத்னா', 'வித்யா ஜோதி ' மற்றும் 'லங்கா அபிமான்ய' போன்ற விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

கொழும்பில் இறுதியாக இடம்பெற்ற இவரது பிறந்த தினக் கொண்டாட்டங்களில்,1965 ஆம் ஆண்டு முதன் முதலில் விண்வெளியில் இறங்கி நடந்து புகழ்பெற்ற ரஷ்ய வானியல் விஞ்ஞானியான டாக்டர் அலெக்ஸே லினோவ் விசேட அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கல்வியியற் பேராசான் சின்னத்தம்பிக்கு மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கல்வியியல் பேராசான் மா.சின்னத்தம்பியின் மணிவிழா இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள மணிவிழாவுக்கு வேலணை மத்திய மகா வித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமை தாங்குகிறார்.

இம் மணிவிழா நிகழ்வில் அரச அதிபர் க.கணேஷ், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் வலயக் கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்கள் உட்பட கல்வியியலாளர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

(ச)

## மன்னாரில் ...

காரணமாக மன்னார் நகர் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆரம்ப கல்வி மாணவர்களின் கல்வியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மழை காரணமாக உயிலங்குளத்தில் விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளதாக மன்னார் பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

## அரசாங்கத்தை ...

ஒத்துழைப்பு வழங்கவும், அரசாங்கத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கும் தயாராக இருப்பதாக நீதியமைச்சர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-2)

## இலங்கை இராணுவத்துக்கு உதவக்...

இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான போரை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரின் தாக்குதல்களால் தமிழர்கள் தொடர்ந்து பலியாகி வருகின்றனர். மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

அனைத்துலக சமூகம்தொடர்ந்தும் கண்டித்து வந்த போதிலும் இந்த தாக்குதல்கள் நடந்து வருகின்றது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜா தெரிவித்தார்.

இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான கடல் பகுதியில் கண்ணிவெடிகளை இலங்கை இராணுவம் பொருத்தியுள்ளது. இதனால் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழ் மீனவர்கள் பலியாகின்றனர்.

சமீப காலங்களில் இப்படிப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கடலில் கண்ணி வெடிகளை வைப்பது குறித்து பல அனைத்துலக கருத்தரங்கில் பேசப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

1987இல் ஹேக் மாநாடு இது குறித்து கூறியுள்ளது. மனிதாபிமான சட்டத்திற்கான அனைத்துலக சமூகம் இதில் தலையிட்டுள்ளது.

பல அனைத்துலக விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய அனைத்துலக நடைமுறைகளை கடைப்பிடிக்காமல் அதற்கு எதிராக இத்தகைய கண்ணிவெடிகளை இலங்கை இராணுவம் பயன்படுத்தியுள்ளது.

இச்சூழலில் இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு பயிற்சி அளித்து வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

தமிழர்களைக் கொல்லும் இலங்கை இராணுவத்திற்கு அளிக்கும் பயிற்சிகளை இந்தியா உடனடியாக நிறுத்த வேண்டும்.

எந்த வகையிலும் இலங்கை இராணுவத்திற்கு இந்தியா உதவக் கூடாது. இலங்கையில் போர் அத்து மீறும் சூழலில் தமிழகத்திற்கு அகதிகள் வருகை அதிகரித்துள்ளது.

இத்தகைய சூழலில் இந்திய அரசு ஒருவார்த்தை கூடப் பேசாமல் இருப்பது கவலையளிக்கின்றது. அது கண்டிக்கத்தக்கது.

ஆகையால் இலங்கை இராணுவத்திற்கு இந்தியா அளித்துவரும் பயிற்சி மற்றும் இலங்கை தொடர்பான தெளிவான கொள்கையை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்றார் டி.ராஜா.


டி.ராஜா பேசுகையில், சில உறுப்பினர்கள் குறுக்கீடு செய்தனர். ஆனால் தி.மு.க உறுப்பினரான சண்முகசுந்தரம், டி.ராஜா எழுப்புவது மிகவும் பாரதூரமான விவகாரம், பேச அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதேபோல் டி.ராஜாவின் கருத்தை பாரதீய ஜனதாக் கட்சியின் உறுப்பினர் திருநாவுக்கரசுவும் ஆதரித்துப் பேசினார். (ச-5)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சின்னப்பிள்ளை

### (காரைநகர்)



காரைநகர் கப்பம்புலத்தைப் பிறப்பிடமாகவும் இல. 67/42, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது இல.15, மல்லிகா ஒழுங்கை, வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி சின்னப்பிள்ளை நேற்றுக் காலை 19.03.2008 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவகாமி தம்பதிகளின் மகளும், வல்லிபுரம், சின்னப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற நமசிவாயம் (சிவகுமார் களஞ்சியம், யாழ்ப்பாணம்) மற்றும் இராசம்மா, சரஸ்வதி, பரமநாதன் (நாதன் களஞ்சியம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாயாரும், பராசக்தி, பொன்னம்பலம், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் சியாமளா (வாசுகி) ஆகியோரின் மாமியாரும் கணேசன், காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் சரஸ்வதி, கமலாதேவி, பராசக்தி, பாலாமணி, சிவபாக்கியம் ஆகியோரின் சிறிய தாயாரும், சிவகுமார், குகநேசன், பிரபாகரன், சிவானந்தராஜா, தனலட்சுமி, வசந்தகுமாரி, கணேசகுமாரி, கிருஷ்ணகுமாரி, கிருஷ்ணவேணி, யோகேஸ்வரி, சத்தியபாமா, சசிவர்ணன், சதீஸ்வரன், சரவணபவன், லவநாதன், சாமினி, காலஞ்சென்ற குசநாதன் மற்றும் நிஷநாதன், கௌசிநாதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2008) வியாழக்கிழமை காலை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;

சி.பரமநாதன்
இல.15,மல்லிகா ஒழுங்கை
வெள்ளவத்தை,
கொழும்பு -06

தொ.இல: 0112505445
0777739836
0662158007

## யாழ்.மாவட்ட பெருந்துடுப்பாட்டப் போட்டி-2008

மேற்படி போட்டி சம்பந்தமாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரின் தலைமையில் 2008.03.19 இல் நடைபெற்ற கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

1. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பெருந்துடுப்பாட்டப் போட்டிகளை அமைதியான முறையில் எளிமையாக நடாத்துவது.
2. இது விடயமாக மாணவர் குழுக்களாக வீதியில் உலாவுதல், பணம் வசூலித்தல், பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.
3. பாடசாலையின் பெயரால் எவரும் பணம் வசூலிப்பதும் ஊக்கம் அளிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.
4. இது சார்பாக பெற்றோர்களினதும், பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது.

1. அதிபர் யா/ மத்திய கல்லூரி.
2. அதிபர் யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி.
3. அதிபர் யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
4. அதிபர் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C-917)

**மேரி திருமண நிலையம்**

வெளிநாட்டில் வசிக்கும் P.R உடைய Non R.C., R.C., இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை 1962 -1985க்கு உட்பட்டவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

ச.உமாச்சந்திரன்
46,புதுவீதி,கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
(938) T.P:-0779116346

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ. ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.